بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# மஜ்மூஅ முனாஜாத்.

இதில்

ஹக்கு பேரில் முனாஜாத்
யாஸையிதி மாலை
யாகுத்பா மாலை
தலைபாத்திஹா
ஸலவாத்துப் பாட்டு
முத்துமணி மாலை
பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை
முஹியித்தீன் முனாஜாத்
காஜா பந்தே னவாஸ் முனாஜாத்
சாசுவதி மாலை
இன்னிசை காஸீம் புலவர்
கலியாண வாழ்த்து பதங்கள்

ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

---

இஃது
சென்னை, திருவல்லிக்கேணி,
ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
அவர்களால் தங்களது
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது
இரண்டாம் பதிப்பு.

(*Copy-Right Reserved.*)

இதன் விலை] 1954. [அணா 1·2

N56

# மஜ்மூஅ முனாஜாத்தின்
# விஷய அட்டவணை.


| எண். | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | ஹக்கு பேரில் முனாஜாத் .... .... .... | 1 |
| 2. | யாஸையிதி மாலை .... .... .... .... | 3 |
| 3. | யாகுத்பா மாலை .... .... .... .... | 7 |
| 4. | தலைபாத்திஹா .... .... .... .... | 14 |
| 5. | ஸலவாத்துப் பாட்டு .... .... .... | 15 |
| 6. | முத்துமணி மாலை .... .... .... .... | 18 |
| 7. | பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை .... .... | 22 |
| 8. | முஹியித்தீன் முனாஜாத் .... .... .... | 25 |
| 9. | காஜா பந்தே னவாஸ் முனாஜாத் ... .... | 29 |
| 10. | சரகவதி மாலை .... .... .... .... | 33 |
| 11. | இன்னிசை காஸீம் புலவர் .... .... | 40 |
| 12. | கலியாண வாழ்த்து பதங்கள் | 45 |


1141

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஹக்கு பேரில் முனாஜாத்து.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

காவலாய் நிற்கும் வல்லோன் கத்தனாய்ச் சிவனல்ல
மாவலாய்ப் போற்றி வாழ்த்தி யதற்குண வளித்த கோமா
னாவினா லெளியோர் கேட்கு நாட்டத்தின் படியே தந்து
தாவிலா றஹ்மத்தாலே தற்காக்கும் பொருள தாமே. 1

வேறு

அருவாயால மடங்கலுக்கு மரிய பொருளாய் விளங்கி நிற்குந்
திருவா யமையாப் பேரொளிவாய்த் திகழ்ந்து நாளும் பராபரிக்குங்
கருவாய்க் கருவி னுண்மணியாய்க் காட்சி யருளும் றஹ்மானே
யுருவாய்த் துலங்கு மன்னானே யுனது கிருபை யருள்வாயே. 2

நாடு நாட்டப் பயனதுபோ னனிகோ ளால மடங்கலையு
மோடு பெறவே படைத் தெவைக்கு முன்னு மிரண மிகக்கொடுத்து
வீடிலாது காத்தளிக்கும் வேதப் பொருளே றஹ்மானே
கூடு நின்ற னடியார்கள் குறைக டீர்ப்பாய் காதிறுவே. 3

உனது கிருபைக் கடலிடத்தி லுதித்த மணியாய்த் தீனோர்க
டனது சேமப் பொருளாகுந் தாஸீம் நபியார் பொருட்டாலே
கனதி இலாஹி நாயகனே கதியின் பயன்யா காபிலுனா
மனது கலங்கு மெளியோர்கண் மறுக்கந் தவிர்ப்பாய் றஹ்மானே. 4

புவியில் விளங்கு நபிமார்கள் புகழும் பொருட்டான் முன்னுள்ள
அவுலி யாக்கள் ஷுஹதாக்க ளரிய பெரியோர் பொருட்டாலுந்
துவமே முகிதே தூயோனே துலங்கு நாசிறு னவனே
கவலை நீக்கி பலாய்க ளெல்லாங் காணா தகற்றாய் றஹ்மானே. 5

துன்ப நீக்கி யறிவிளக்குந் தூய வேதமொரு நாளி
லின்ப முனது பொருளாலே யினிய வுன்றன் பொருட்டாலே
யன்பு புரியும் ஹபீபேயெம் மாகத்துயிரோ னையானே
வன்பு மாற்றி நல்வரிசை வண்ட யருள்வாய் றஹ்மானே. 6

உள்ளங் கலங்கிற்தத்தளித்தே யுணர்வு மயங்கி நின்னடியார்
வெள்ளங் கண்ணுன் மிகவோட வெருளுந் துயர மணுகாமற்
கொள்ளுங் கிருபை மவுலாணு குதாயே வதூதே கப்பாறே
கள்ளநோய்க தங்கடங்கள் காப்பாய் காப்பாய் றஹ்மானே. 7

வேதம் நிறைந்த சூறத்தொடும் விளங்கும் ஆயத்ததனாலே
யோதும் பொருட்டால் மூமீன்க ளுள்ளும் பொருட்டா லானையினாற்
போதம் பெருகு முன்னுடைய புகழூஞ் சிறப்பின் ஆக்கினையாற்
காதும் பலாய்க ளணுகாமற் காப்பாய் காப்பாய் றஹ்மானே. 8

வள்ளன் மஹ்மூதெனு நயினார் வழியி லொழுகி யுன்னுடைய
விள்ளு மார்க்கந் தனையெடுத்து விளக்குந் தீனோ ராகையினால்
றெள்ளு மறிவே மெய்ப்பொருளே தெளிவா யெங்கள் கண்மணியே
யெள்ளு மாபத் தணுகாம லின்பம் புரிவாய் றஹ்மானே. 9

அடியார் செய்யும் பிழைக ளெல்லாம் ஆளுமிறை நீ பொறுப்பதல்லாற்
படியோர்வேறே யில்லைமன்னு பயனுநயனு மருள்வோனே
நெடியோ னிம்மை மறுமையிலு நீதி யுடையோ னாகையினாற்
கொடிய பலாய்க டணுகாமற் குறைக டீர்ப்பாய் றஹ்மானே. 10

முன்னு நீயே யுடைய பொருண் முழுது நீயே யாண்டருளும்
பின்னு நீயே யிரப்பை யெல்லாம் பேணி நீயே யன்றியில்லை
யென்னு நீயே மென்மேலு மென்று நீயே காப்பாயே
யுன்னு மடியார்க் கொருதீங்கும் வாரா தருள்வாய் றஹ்மானே. 11

## ஹக்கு பேரில் முனாஜாத்து

முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்

# யாஸையிதி மாலை.

## பைத்து

மவ்லாய ஸல்லிவஸல் லிம் தாயி மன் அபதா
அலா ஹபீபிக்ககை ரில்கல்கி குல்லிஹிமி
வல் ஆலிவஸ்ஸஹ்பிவத் தப்பாஇ பில்இஹ்ஸான்
மாதாம வஜ்ஹுகலில் மஹ்பூபி பில்கறமி

யாநபியே யாநபியே யெங்கள் முஹம்மதுவே
யாநபியே யாநபியே யேகன் றஸூல் நபியே

யாஸையிதீ யாறஸூ லல்லாஹி குதுபியதி
மாலீ ஸிவாக்கவலா அல்வீ இலா அஹதீ

நாயகமானவரே நல்ல றஸூல் நபியே
தாயகமா யென்கையைத் தயவாய்ப் பிடித்தருள்வீர்
தாங்களன்றி யெனக்குதவி தயவு செய்ய யாருமில்லை
பாங்காக யானெதுங்கப் பண்புடையா ராருமில்லை

பஅன்த்த நூறுல்ஹுதா பீக்குல்லி காயினத்தின்
வஅன்த்த ஸிர்றுன்னதா யாகைற முஃத்தமதீ

நீங்களோ நேர்வழிக்கு நிரப்பமுள்ள நல்லொளிவாம்
ஓங்கும் கொடையின் ஸிர்றை யுகப்பான நன்னபியே
ஊன்றுதலாய் பிடிப்பதற்கு முவந்த நல மானவரே
தூண்டா மணி விளக்காய்த் துலங்குகின்ற யாநபியே

வஅன்த்த ஹக்கன்கியா துல்கல்கி அஜ்மஇஹிம்
வஅன்த்த ஹாதில்வரா லில்லாஹி திஸ்ஸததீ

ஹக்காய்ப் படைப்புகளைக் காப்பாற்றும் ரட்சகரே
மக்கா தனிற் பிறந்த மதனியே யாநபியே
நேர்நடத்தும் றப்பளவில் நிலத்திலுள்ள ஜின்மனுவைச்
சீரான மோட்சமதிற் றெளிவாக்கும் யானபியே

யாமன் ய கூமுமகா மல்ஹம்தி முன்பரிதா
லில்வாஹி தில்பர்திலம் யூலத்வ லம்யலிதி

மஹ்மூ தெனுந் தலத்தில் மன்னனுடன் தனித்து
வெகுமகிமை காட்சிபெற்ற வேதாம்பர் யாநபியே

தந்தைதாய் தாரம் சந்ததியும் மில்லானைச்
சொந்தமுடன் காட்சிபெற்ற தூதாங்கர் யாநபியே

யாமன்த்த பஜ்ஜறத்தில் அன்ஹாறு நாபி அத்தன்
மின் இஸ்ப ஐஹபிபறவ் வல்ஜைஷ பீல்மததி

வாகாய் விரல்களிலே வரவழைத்த நன்னதியால்
தாகங்க டீர்த்துவைத்த தாஹா றசூல் நபியே
மறுமையிலே வருந்தாகம் வருத்த மெல்லாம் உங்களுட-
கருணையால் மாற்றிவைப்பீர் ஹாமீம் றசூல் நபியே

இன்னீ இதாமஸ்ஸனீ லேமுன்யு றவ்விஉனீ
அக்கூலு யாஸையிதஸ் ஸாதாத்தி யாஸனதீ

திடுக்கமா யென்னை நோக்கித் தீண்டுகின்ற தங்கடங்க
ளிடுக்கந் தனிலுஞ் சொல்வே னென்ஸையிதீ நபியே
ஸாதாத்துக ளானவருக்கு ஸையிதே யென் ஸனதீ
ஆதரவாய் வந்துதித்த அஹ்மதுவே யாநபியே

குன்லீ ஷபீ அன்இலர் றஹ்மானி மின்ஸலலீ
வம்னுன் அலையபிமா லாக்கான பீகலதீ

எளியேன்றன் செய்பிழையை யிறையோனுந் தான் பொறுக்கத்
தெளிவான மன்றாட்டஞ் செய்வீர்கள் யாநபியே
நித்திய சுகம் பெறவே நேசமா யென்பேரில்
முத்திதந் தருள்வீர்கள் முஹம்மதுவே யாநபியே

வன்லுறுபி ஐனிர்ரிலா லீ தாயி மன் அபதா
வஸ்துறுபி தவ்லிக்கத்தக் லீரீ மதல் அமதி

மாறும லெப்பொழுது மகிழ்ச்சியா யென்னளவில்
நேர்பொருந்துங் கண்ணாலே நீர் பாரும் யாநபியே
உங்கள் மகிமை கொண்டே யூழிநாட் செய்பிழையாற்
பங்கப் படுத்தாமற் பலன் தருவீர் யாநபியே

வஃதிபு அலையபி அபு வின்மின்க யஷ்மலுனீ
பஇன்னனீ அன்கயா மவ்லாய லம் அஹிதி

உங்களில் நின்றுமுள்ள உகப்பான பொறுக்குதல்தா
னெங்களைப் பொதிந்து கொள்ள விரங்குவீர் யாநபியே
கருத்தரே யும்மை யன்றிக் காண்கிலே னென்றெனக்குப்
பெருத்த பிழை பொறுத்துப் பேணுவீர் யாநபியே

இன்னீத்த வஸ்ஸல்த்துபி ல்முக்த்தாரி அஷ்ரபிமன்
றகஸ் ஸமாவாத்திஸிர் ரில்வாஹி தில் அஹதி

தாகமாய் வான் கடந்து ஷறபான அறுஷளவில்
வாஹிதா யிருக்கும் றப்பை வசனித்த யாநபியே
எனக்குதவியான நல்ல வின்பமுள்ள வஸீலாவே
மனக்கவலே தீர்க்கு மெங்கள் வள்ளலே யாநபியே

றப்புல் ஜமாலித்தஆ லல்லாஹு காலிகுஹு
பமிதுலு ஹுபீஜமீ இல்கல்கி லம் அஜிதி

ஜமாலுள்ள றப்புஉம்மைத் தன்னொளிவாற் றுனவைத்தான்
கமால் முழுதும் பெற்றுவந்த காரணரே யாநபியே
உங்கள்போ லொருபடைப்பை யுடையோன் படைக்கவில்லே
யெங்கணபி யாகவந்த ஏற்ற முள்ள யாநபியே

கைரிற் கலாயிக்கி அஃ லல்முறுஸ லீனதுரு
ஸுகுரில் அனுமிவஹா தீஹிம் இலர் றுஷுதி

முறுஸலீ னுனவர்க்கு முன்னுன அஹ்மதுவே
நெறியளவில் வழிகாட்டும் நீதரே யாநபியே
எல்லாப் படைப்புகட்கு மேற்ற முள்ள தங்கரிப்பே
நல்ல வழிகாட்டும் நாயகரே யாநபியே

பீ ஹில்த்த ஜஃத்துல அல் லல்லாஹ யக்பிறுலீ
ஹாதல்லதீ ஹுவபீ ளன்னீவ முஃத்த கதீ

அல்லாஹு வென்பிழையை அன்பாய்ப் பொறுப்பதற்கே
யல்லும் பகலுமுங்க ளாதரவே யாநபியே
இப்படியே யென்னுடைய விருதயத்தில் நல்லுறுதி
தப்பாம லென்றனக்கு தந்தருள்வீர் யாநபியே

பமதுஹு ஹமலம் யஸல் தஃபீ மதாஉமுரீ
வஹுப்புஹு இன்தறப் பில் அற்ஷி முஸ்த்தனதீ

உயிருள்ள நாளளவு முங்கள் புகழ்மதுஹால்
கைர் பெருகத் தந்தருளும் காத்திம்ற சூல்நபியே
அறுஷுடைய றப்பான அல்லாவின் திருமுகத்தைப்
பிரிசமுடன் கண்காட்சி பெற்றீரே யாநபியே

அலேஹி அஸ்க்கா ஸலாத் தின்லம்ய ஸல் அபதா
மஅஸ் ஸலாமிபிலா ஹஸ்ரின் பிலா அததி

மட்டு திட்ட மெண்ண மன்றி மன்னன் ஸலா முடனே
இஷ்டஸல வாத்துமக்கே யிறைகிருபை யாநபியே
எக்காலமு மாகவிந்த ஏற்றமுள்ள ஸலவாத்து
ஹக்காக வந்திறங்கும் ஹாதிற ஸூல்நபியே

வல்ஆலி வஸ்ஸஹ்பி அஹ்ற லில் மஜ்தி காத்திபத்தன்
பஹ்ரிஸ் ஸமாஹிவ அஹ்ற லில்ஜூதி வல்மததி

கொடைமிகுந்த ஆள்களுக்குங் குதுபான தோழருக்கு
முடையோன் கிருபையுண்டா முதவிசெய்வீர் யாநபியே
எடுத்துப் படிப்பவருக்கு மின்பமாய்க் கேட்பவருக்குந்
தொடுத்தோ ரனைவருக்குந் துணை செய்வீர் யாநபியே

ஷம்மஸ் ஸலாத்து அலா கைரில் பரிய்யத்திமன்
அத்தா இலேஹிபிவஹ்ற யில்லாஹி ஜிபுரீலு

நாயகன் மலக்கான நலமான ஜிபுரீலு
ஆயும் வஹீசெலுத்தும் அஹ்மதுவே யாநபியே
ஹக்கன்ஸல வாத்துநித்தம் கைருன யாநபியே
முக்கியமா யுங்களுக்கு மொழிகிறோம் யாநபியே

பைலுஸ் ஸலாத்தி அலா கைரில் ஹாதாத்திஜரு
மாலஃல அல்பறுகுமின் ஆபாகி னஜ்மாஇ

வானின் திசையில் நின்றும் வழங்குமின்க ளுள்ள மட்டும்
மானின் பிணைநபியே மகிமையுங்கட் கேநபியே
உற்றஸல வாத்தி னுகந்தபை லானதுவை
யற்ற மன்றி யுங்களுக்கே யருள்கிறோம் யாநபியே
தனதாகக் கண்காட்சி தாத்தொளிவைக் கண்டு வந்த
இனிதான நபிபேரில் இறையேஸல வாத் துரைப்பாய்
சிறப்பான கஃபாவில் தெளிவாக வந்துதித்த
நிறப்பமுள்ள முஹம்மதுவே நெறிநேச ரேநபியே
மலக்கான ஜிபுரீலு மகிமைநா வுரைத்த கவி
துலக்கமாய்ப் படிப்பவர்க்குத் தூயோன் றஹ்மத் தண்டாம்
துய்யோன் முஹம்மதுவின் துலங்கும் றவுலா மதிலின்
மெய்யா யெழுதப்பட்ட விளங்குங்கவி நற்பொருளே.

யாறப்பி ஸல்லி அலா மன்ஹறல்ல பில்ஹறமி
தாஹிர்ற சூலல்லதீ கதுகுஸ்ஸ பில்கறமி.

யாஸைஸிதி மாலை முற்றிற்று.

ஷேக் இஸ்மாயீல் அவர்களின் புதல்வர்
அப்துஸ்ஸமது ஆலிம் ஸாஹிபு அவர்கள் பாடிய

# "யாகுத்பா மாலை."

அல்ஹம்து லில்லாஹிஹம் தன்தாயி மன்அபதா
வஷ்ஷுக்று ஷுக்றன்கஸீ றன்வாஸி பன்றகதா
ஸும்மஸ்ஸ லாத்து அலா வாகில்அனுமிறதா
வல்ஆலி வஸ்ஸஹ்பிவத் துப்பாஇ பித்தீனி

அல்ஹம்து லில்லாஹியெப் புகழாதி யொருவனுக்காம்
நல்லதிக ஷுக்றுஞ்சிறப் பும்நாய னொருவனுக்காம்
சொல்லெந்த நாள்ஸலவாத் திறைதூதர் நபிதமக்காம்
வல்ஆலி வஸ்ஸஹ்பிவத் துப்பாயி பித்தீனி

யாகுத்ப அஹ்லிஸ்ஸமா வல்அற்ளி கவ்ஸஹுமா
யாபைள ஐனஉஜூ தைஹிம்வ கைஸஹுமா
எப்னல்அ லிய்யைனிகது அஹ்றஸ்த இற்ஸஹுமா
யாகைற மன்கானயுத் ஆமுஹ்றயி யத்தீனி

வானோர்க்கும் புவியோர்க்குமே வருங்குதுபு ஆதரமே
தானீர்ப திக்கீருஜூ தாய்வந்த தாபரமே
தீனின்பு லியலிஈர் பாலர்கள் பேருமே
தானந்த ஈறுந்தரெங் கும்முஹ்யி யத்தீனே

யாகவ்ஸுல் அஃளமுகுல் லத்தஹ்றி வல்ஹீனி
அஃலாவ லிய்யின்பிதஹ்ற கீமின்வ தம்கீனி
அவ்லாப கீரின்இலல் மவ்லாவ மிஸ்கீனி
அந்த்தல்ல ஸித்தீனுஸம் மாமுஹ்றயி யத்தீனி

எக்கால மெந்நேரமும் கவ்ஸென்னும் பேருடையோர்
ஹக்கான வலிமார்க்குமே லாம்பான வலியெனவோர்
மிக்காத ரிப்போர்களின் மிகவிரப்பையு முடையோர்
தக்காத்த ருள்நாமநா னும்முஹ்றயி யத்தீனே

வகதுஅ தாக்கிகிதா புல்லாஹி முஸ்த்தமிஆ
யாகவ்ஸுல் அஃளமுகுன் பில்குற்பி முஜ்த்தமிஆ
அந்தல்க லீபத்துலீ பில்கவ்னி முல்த்தமிஆ
ஸும்மீத்த பிஸ்மின் அளீ மின்முஹ்றயி யத்தீனி

வல்லானி னெதிர்மொழிபெற் றொலிகள்தன் நாயகமே
நல்லானை யெங்கெங்குங்கவ் ஸெனுமுத்துத் தூயகமே
எல்லாப்ப திங்குகலீ பக்தாதி தாயகமே
உல்லாஸ தீனருள்நா மம்முஹியி யத்தீனே

அந்த்தல்மு ஸம்மாபி அப் தில்காதி ரில்பர்தி
ஸுப்தஸ்ஸீன அஷ்றகீ பன்ஸாயி மஸ்ஸர்தீ
வலம்த்த னம்நவ்மத்தன் பீஹாஅ லாதர்தீ
அந்த்தல்மு லக்கபுஹக் கன்முஹ்யி யத்தீனி

பேரப்துல் காதிறுவென் றருள்நாமம் பெற்றவரே
நீர்வெறுத் தீராறுவாண் டின்நோன்பு வைத்தவரே
நீரந்தக் காலமெலாம் நிறைதுயில்வெ றுத்தவரே
ஏர்பட்டங் தீனஹயாத் தருள் முஹ்யி யத்தீனே

இஸ்குந்த்த லில்காதிரில் முக்தாரி அப்தன் அதாஃ
அஃத்தாக்க மின்குத்றத்தின் மாஷிஃத்த மின்முஸ்த்ததாஃ
பஅந்த்த முக்ததிறன் பீகல்கி ஹீவமுகாஃ
அந்த்தல்வ கீலுலஹு யாமுஹ்யி யத்தீனி

படைத்தளிக்குங் காதிறுக்கு பாங்கடிமை செய்ததிலே
கிடைத்ததிக சக்தியொடு கீர்த்திதங் தானதிலே
விடத்துறமெவ் வுயிர்களிலும் விதஞ்செய்தங் தானதிலே
படைத்தோன்வ கீலாகும்நீர் யா முஹ்யி யத்தீனே

ஷர்றப்த்த ஜீலானபில் பீலாதி ஸாக்கினஹு
அள்ளம்த்த பில்கபுரிபக் தாதன்அ மாக்கினஹு
யஸுறுஹு குல்லுமுஷ்த் தாக்கின்வ லாக்கிளஹு
பீபைத்தி ஹீகத்யுலா கீமுஹ்யி யத்தீனி

பிறந்தீர்கள் ஜீலானதால் பிரதான மப்பதியுஞ்
சிறந்தடக்கம் பக்தாததால் சிறப்பான தப்பதியும்
நிறைந்தாசை கொண்டேஸியாற் நெறியா வரப்பதியும்
திறந்தோர்கள் வீட்டிற்சியார் செய்முஹ்யி யத்தீனே

றஜத்த தீனல்ஹுதா ஷக்ஸன்க தாஹழா
பஷைபத்த ஹுலம்ஸத்தன் கபைத்தஹு அறளா
பஸால அன்ஹுல்லவீ கத்அம்ம ஹுமறளா
பகாம எதுஊக்கஹுப் பன்முஹ்யி யத்தீனி

தீனுங்கள் பால்வந்தொரு நோயாளிபோல்கவல
தானடுத்தேகையால் தொட்டதே பிணியகல
தீனுடனே தானெழும்பி ஷறபாய்ப்பு கழ்கவல
தீனஹயாத்தாக்கிவைத் தீர்முஹ்யி யத்தீனே

அந்தல்ஹு ஸைனிய்யவல் ஹஸனிய்ய குந்த்தமஆ
அபன்வ உம்மன்ஷரீ பைனிக திஜ்த்தமஆ
பகுந்த்த ஷம்ஷன்வபது றன்றூற னில்த்தமஆ
அந்த்தல் அஹக்குலிதுத் ஆமுஹ்யி யத்தீனி

சங்கைப்பி தாஹஸனுக் தாயும்ஹுஸைனவ்வழி
பொங்கும்பி ரண்டும்ஷரீ பாய்க்கூடிப் புகழுமொளி
திங்கட்பொ ழுதொளிபோல் தினமும்மி லங்குமொளி
எங்கும்ம ருள் தரும்நா மம்முஹ்யி யத்தீனே

அவ்ஷாமி இய்யபஸிற் தல்ஹன்ப லிய்யபிலா
ஹஜ்ரின்லி தஹ்தாத்தபில் கைறைனி முஃத்ததிலா
பலம்த்த ஸல்றுகியன் அஃலாம காமிஉலா
ஹவைத்த அர்பஅவஸீத் தின்முஹ்யி யத்தீனி

ஷாபீஹு மஸ்ஹபிலாய்ச் சார்ந்தீர்கள் ஹன்பலியாய்
லாபீவெ றுப்பும்இரண் டின்நல்வ சையுளதாய்
மாபீம ருத்திபுகள் மேலாம்புங் கையுளயாய்
றுபீஃஎ னும்முயர்கீர்த் திமுஹ்யி யத்தீனே

கத்கும்த்த பிஸ்ஸித்கிவல் இக்லாஸி வஸ்ஸுஹ்தீ
வல்இஜ்த்தி ஹாதிவபிய் யல்வஃதி வல்அஹ்தி
பகுல்லு அஹ்லித்துகா வஸ்ஸுஹ்தி வல்ஜுஹ்தீ
எதுஊக்க யாகவ்ஸுல்அஃ லம்முஹ்யி யத்தீனி

தினமுண்மை யோடுஇக்லா ஸும் ஸுஹ்து முள்ளவரே
மனமுறுதி யோடறுதி யும்ஜுஹ்து முள்ளவரே
கனம்பொருந்துந் தக்வாவினோர்க் கனநெறியு முள்ளவரே
தினமருளும் யாகவ்ஸுல்அஃ லம்முஹ்யி யத்தீனே

கம்மின்க றுமாத்திஹக் கின்மின்கஃ கதுளஹறத்
முனீற தன்பீகுலூ பில்கல்கி கதுஸஹறத்
கமுஃஜி ஸாத்திநபிய் யின்பில்வ றஷ்தஹறத்
யாமன்த ஆறப்புஹு யாமுஹ்யி யத்தீனி

உங்கள்க றுமாத்துக ளுலகில்வெளி யாகுவதும்
எங்குமுள கல்குகளுக் கும்வாடை வீசுவதும்
பொங்கும் நபிமுஃஜிஸாத் தைபோற் புகழுவதும்
உங்களுக் கிறையருள்நா மம்முஹ்யி யத்தீனே

மலஅத்மு தவ்வனத்தன் குத்பன்மு அல்லபதன்
ஹவத்தில்அ ஆஜீபஅக் பாறன்மு ஸல்லபதன்
ளாஅத்இ லல்ஹவ்ஷீஆ ஸாரன்மு கல்லபதன்
அஃலீத்த தீனல்ஹாதா யாமுஹ்யி யத்தீனி

நற்பாம் கருமாத்துகள் நவிலும் கிதாபுகளாய்ப்
பிற்காலத் துள்ளோர்களும் பேசும் புதுமைகளாய்
நற்பாய்ப்பி ரசங்கமாய் நாள்மஹ்ஷ ரளவுகளாய்
அற்பாலுஞ் சறுகாதநேர் வழிமுஹ்யி யத்தீனே

சத்குல்த்த பில்இஸ்னிமின் மவ்லாக்க முஃத்தமிரு
கதமீஅலாறகபா தில்அவ்லி யாஇத்திரு
பகுல்லு ஹாம்கத்ரலூ வல்அன்ல ஹாபுஷ்று
யாமன்ஸ மஸ்மன்அலீ ஹிம்முஹ்யி யத்தீனி

தன்னுதி யருளின்படி தானெவையும் விண்டதுவே
என்பாத மொலிகள் புயத் தோர்தோளில் நின்றதுவே
அன்பாக வொலியாவரு மகம்பொருந்திக் கொண்டதுவே
தன்பேரு மேலாம்புமேல் யாமுஹ்யி யத்தீனே

வபிகி ஸானத்திஅஸ் ஸுறின்ற வாஸனதா
அன்குல்லி மன்உளிஅத் பீஉனுகி ஹிஅததா
இல்லாஅ பாபக்ரின் மின்ஹாம்ப தாபபிதா
ஹாஸ்தல்ம ஆலியஜம் மன்முஹ்யி யத்தீனி

விண்டார்கி ஸானத்துல்அஸ் ஸுரின்கி தாபுதனில்
உண்டாகு மென்பாதமெல் லாமொலிகள் தோழதனில்
எண்டோத பாபக்ரியான் விரும்பலது மொழியதனில்
உண்டாகும் பிழைதுயர்தீக் கும்முஹ்யி யத்தீனே

குல்லுத்த வாயிபிபில் இஜ்மாஇ முத்தபிகா
அலாக்க மாலிக்கபீ உல்யாக்க முத்தஸிகா
ஹத்தல்க வாரிஜாஅஹ் லுஸ்ஸைகி வஸ்ஸந்தகா
அந்த்தல்ம தாறலிகுல் லின்முஹ்யி யத்தீனி

தங்கள்ரி றப்பமுமே லாம்பவரு மோதுவர்கள்
பங்கமுள சிந்திகுகள் ஜைகோடு காபிருகள்
மங்குங்க வாரிஜாகள் மாற்பேசும் ராயினுகள்
பொங்கும்பு கழ்சேர்ஒலி யேமுஹ்யி யத்தீனே

மஆப நஹ்றஜகஸு இல்மின்வ லாக்கஷ்பின்
பல்குல்லு நஸ்நவ் அலா மாபீக்க மின்வஸ்பின்
லம்யபுலு கூபிஹிமின் குல்லின் இலானிஸ்பின்
அன்ஜைத்த குல்லமுரீ தின்முஹ்றயி யத்தீனி

அறிவாளி கஷ்புடையோ ரறிந்துங்கள் பாதையதே
குறியாய்ப்பு கழ்ச்சியிலுங் கூறரிது பாதையதே
நெறியான வர்ணிப்பதில் நேர்காணும் பாதையதே
பிரியாதீ டேற்றமும்முரீ தைமுஹ்றயி யத்தீனே

வகுல்த்த மன்லாலஹு ஷைகுன்ப இன்னிலஹு
ஷைகுன்வ முற்ஷிதுஹு ஹத்தாக்க அன்னிலஹு
ஜலீஸு ஹுகல்வத்தன் வமின்ல துன்னிலஹு
வஸ்லுன்ப குன்ஹாக்கதா வீமுஹ்றயி யத்தீனி

தீர்மானம் ஷைகாகவே ஷைகில்லாப் பேர்தனக்கு
நேர்வழியு மெந்தனிலே நெறிசெய்த வன்தனக்கு
சேர்மான மெந்தனிலே சேர்வாரவர் தனக்கு
நீயென்னைச் சேர்மானஞ்செய் வீர்முஹ்றயி யத்தீனே

வமன்யு ஞதிஸ்மீ அல்பன்பி கல்வத்திஹி
அஸ்மன்பி ஹிம்மத்திஹி ஸற்மன்லி கப்வத்திஹி
அஜப்த்து ஹுமுஸ்ரிஅன் மின்அஜ்லி தஃவத்திஹி
பல்யத்உ யாஅப்தல்கா திற்முஹ்றயி யத்தீனி

என்பேரை ஆயிரமோர் கல்வத்தி லேயிருந்து
துய்மையொடு ஹிம்மத்தாய்த் துணையின்றி யேயிருந்து
தன்மைதனைத் தீர்த்தேயுன் தனையுவ்வ னேவிரைந்து
பொன்மைசொல் யாஅப்தல்கா திற்முஹ்றயி யத்தீனே

பஃதஸ்ஸ லாத்திஸ்னதை அஷ்றக மின்றக்ஆ
மஅல்ப வாத்திஹிவல் இக்லாஸி பில்கலுஆ
யாகவ்ஸுல் அஃளமுஅப் தல்காதி ரிஸ்ஸுற்ஆ
யாஸையி திஹ்றலுற்னி யாமுஹ்றயி யத்தீனி

நேராக பாத்திஹாகுல் ஹுவோதி யேமுழுதும்
ஈராறு றக்ஆத்துதான் இறையோன் றனைத்தொழுதும்
நேராக வந்தேஹுலூ ருவீர்க ளப்பொழுதும்
தீராத்து யர்தனைத்தீர்க் கும்முஹ்றயி யத்தீனே

வகுல்த்த இன்னயதீ ஹாதீல தாயிமத்துன்
விமன்யுரீதுதரீ கிவஹ்ய காயிமத்துன்
பாஸத்பிஹா அன்புஸன் விர்ஹஷ்தி ஹயிமத்துன்
அனல்மு ஞதாபிஹக் கின்முஹ்யி யத்தீனி

சொன்னீர்கள் தங்களுட தன்பாதை நாடுவர்க்கு
எங்காளு மேதரிபா டெல்லாம்நு பூஸதர்க்கு
குன்றுது நேர்வழியுங் குறையாத வர்களுக்கு
தன்னுக வருள்காமமுண் மைமுஹ்யி யத்தீனே

வஇன்ன ஜத்திரஸூ லல்லாஹி கான்யகூல்
அந்த்தல்க லீபத்துலீ பீகைரி குல்லிமகூல்
பகுல்லி உம்மத்தியல் மததற்த ளாக்கஉகூல்
பஅந் தகப்பிமுஷற் யீமுஹ்யி யத்தீனி

நேர்காட்டு மென்பாட்டனார் நெறிசொன்ன வன்தனக்கு
நீரென்க லீபத்துமே நெறிசெய்யும் உம்மத்துக்கு
யார்ஷறஜ தரிபாடுசெய் தாரென்ன ருள்தனக்கு
நீருதவி செய்தவர்நீ ரேமுஹ்யி யத்தீனே

யாஸையி தீஸனதி கவ்ஸீவ யாமததீ
குன்லீஎஹீறன் அலல் அஃதாயி பில்மததி
முஜீற இற்மீவகுஸ் பியதீமதாமுததி
கலீபத் தல்லாஹிபீ ஞமுஹ்யி யத்தீனி

ரட்சிக்கும் நாயகமே எனக்குதவி செய்பவரே
பச்சிக்கும் பகையர்வினைப் பலியாக்கை தூக்குவரே
உட்சித்த நெறியோர்களுக் குதவிசெய் துய்யவரே
கெட்சித மிறையோன்கலீ பத்முஹ்யி யத்தீனே

வஉத்த னீமின்முரீ தீனஹ்ஜி கல் அக்வம்
வமின்அ பீதிக்கஅப் தன்தாஇ அன்அத்வம்
வமின்ஜ ஞாதிகமிக் தாமன்இ லேஹியுஅம்
நிஃமல் அமீறுஅமீ றன்முஹ்யி யத்தீனி

தங்கள்மு ரீதுகளில் தானென்னை யொருவனுமாய்
உங்கள் அடிமைகளி லுட்சிறிய வடியனுமாய்
உங்கள்ஜ ஞாதுகளின் முதலோரி லொருவனுமாய்
எங்கும்நல் லரசர்க்கா சாம்முஹ்யி யத்தீனே

பஸ்ஸிற்பு ஆதிஸிருத் தன் அந்த்த ஸாலிக்குஹா
பல்லாஹா அஃத்தாக்கஹா பஅந்த்த மாலிக்குஹா
வநஜ்ஜி ஹீமின்லளா பீஹாம ஹாலிகுஹா
சுல்த்தான குல்ஃலிவலிய் யின்முஹ்யி யத்தீனி

என்புத்தி தனைநோக்கிவை திடுமுங்கட் பாதையிலே
தன்நாயன் தங்களுக்காய்த் தானீய்ந்த பாதையிலே
எந்தன்னை ஈடேற்றிவை யிடர்நரகில் சேராமலே
வந்துதவி செய்திடும்சுல்த் தான்முஹ்யி யத்தீனே

ஸல்லல்இ லாஹாமதா மல்கவ்ஸால் அஃலமுகாம்
அலாமு ஹம்மதினில் ஆலிலி கைரிமகாம்
வஆலி ஹீவல்லஸீ தீனர்ற ஷாதி அகாம்
பஸல்ஹா எஷ்பஃலீ யாமுஹ்யி யத்தீனி

இறையோன் ஸலாத்துரைப்பா னேத்தமுள்ள நன்நபிக்கு
குறையாது யர்ந்தபதிக் குடையோர்க் குருநபிக்கு
முறையார்க் கிளைஞர்முதல் நேரொமு வோர்நபிக்கு
மறையோர் ஷபாஅத்தெனக் கருள் முஹ்யி யத்தீனே

வத்தாபி யீனலஹாம் முஅஸ்ஸி ஸித்தீனி
முப்னீன அஜ்ஸாதஹாம் லில்லாஹி லித்தீனி
முஸ்த்தப்ஷிரீனபிபலு லில்லாஹி பித்தீனி
பமின்ஹா முந்தன்சுறன் னீமுஹ்யி யத்தீனி

துடர்ந்தோர்க் குமேளதாளமிட் டோர்தீன்ரு கூன்தனக்குச்
சடந்தேறி இறைபாற்கிருபை சார்ந்தோர வர்தனக்கு
நடந்தோர்க்கு நற்கருணையாம் நாநென்ற பேர்தனக்குக்
கடந்தோர்க ளில்நீரெனக் கருள்முஹ்யி யத்தீனே

நெறியாய் நடவாமலே நெறிகெட்ட பாவியுமாய்
பிரிவாய் விடைதுய்த்திடும் பிழையற்ற தாகியுமாய்ச்
சிறியேன் பிதாஷெய்குஇஸ் மாயீல்தன் செல்வனுமாய்
கரைசேர்ப்பீர் ஸமதின் அப்தை குருமுஹ்யி யத்தீனே

யாகுத்பாமாலை

முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

கீளக்கரை அல்லாமா அஷ்ஷைகு மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஸாஹிபு றஹிமஹு ல்லா அவர்களால் இயற்றப்பட்ட

# தலைபாத்திஹா.

அல்லாஹு ம்ம ஸல்லி அலா முஹம்மத்
யாறப்பிஸல்லி அலைஹிவஸல்லிம்

பிபுதுஇ தலைபாத்திஹல் முனல்லம்
பிஸ்மி அல்ஹம்து ஸலாத்தைச் சொல்வோம் (அல்லா)

பாவையர் திலதமதான பைங்கிளி
பாத்திமத்தைப் புகழ்ந்தே துதிப்போம் (அல்லா)

நேர்ச்சை நோன்பில் துயச்சை நிறைவேற
நீடியக்கத்தலினல் நெடியவன் (அல்லா)

தீட்சைத்துதி குர்ஆனில் செப்பிய
திவ்விய ஷபீ அத்தினைத் துதிப்போம் (அல்லா)

அல்லாஹு ஷப்பஅ ஹாபிஉ அவ
ரல்லாம லார்த்தனைக் காத்து நிற்போம் (அல்லா)

யாகூத்து மற்ஜானைப் பழித்திடும்
யாஸீனின் முத்தினை யாம்புகழ்வோம் (அல்லா)

பிர்தவ்ஸு ஸுந்துஸினை உடுத்திடும்
பில்ஹஷ்ரி ஷாபி அத்தை நினைப்போம் (அல்லா)

பாத்திமத்துஸ்ஸஹ்று பத்தூலே
பாக்கியமே வேறேயாரைச் சொல்வோம் (அல்லா)

அஹ்லுல் அபாவெனும் ஐவர் தம்மினில்
ஆகிய நாயகியைத் துதிப்போம் (அல்லா)

ஐந்து மரியை விட்டே கலிமா
ஐந்தையுமே தெரிந்தோரைச் சொல்வோம் (அல்லா)

தம்மிரு பாத மல்லாது வேறொரு
தம்பமெமக்கில்லை லாக்கின் அறிவோம் (அல்லா)

ஆதி அலீபுலியின் மனைவியர்
அன்பான பாத்திமத்தை நினைப்போம் (அல்லா)

காடுமலை கடல் கானகங்களில்
தேடும் பொருளுமைப் போலகாணேம் (அல்லா)

மைக்காலிருளதிலே மதியை
மன்னன் மாலிக்கவர்க்காய் வருத்திடும் (அல்லா)

ஹக்கர்ன தீன்பயிரேற்றும் காரணர்
கண்மணி பாத்திமத்தைக் கவல்வோம் (அல்லா)

நற்றிருமேனியர் நல்கதீஜா
புத்திரி பாத்திமத்தைப் புகழ்வோம் (அல்லா)

மாணிக்கமேடை குலாவு மாதரில்
காணிக்கை நாச்சியாரால் மகிழ்வோம் (அல்லா)

யாஸித்த நிஸ்வத்தி உல்தி ஆதம்
யாவஸீன் முஹம்மது தம்மகளாய் (அல்லா)

காசினியில் வெளியான கண்மணி
கைதாங்கு மெங்களைக்கால மெல்லாம் (அல்லா)

அலா அபீக்கி தவாமன் ஸல்லா
அல்லாஹு காலிகுனு வகையூம் (அல்லா)

செல்வம் எமக்கிது போலயொன்றும்
ஜென்மத்தில் சம்பவி யாததானும் (அல்லா)

வஅன்க்கி எர்ழல் லாஹு தவ்மா
வல்லாஹி நற்ஜுக்கி வேறை நாடோம் (அல்லா)

அஹ்மது புத்திரன் சொல் துஆவினை
அல்லா கபூல் செய்ய ஆமீன் சொல்வோம் (அல்லா)

தலைபாத்திஹா முற்றிற்று.

---

## ஸலவாத்துப் பாட்டு.

கோச்சகக் கலிப்பா

இன்னல்லாஹ வென்றே குறுஆனிலே
ஏகனுயகத் திறக்கிய தன் பயன்
சொன்னன்யானு மலக்குகள் யாருமென்
தூதர்மீதிற் சொல்லும் ஸலவாத்தையே
பன்னும்யாரு மியம்புங்க ளொன்றிற்குப்
பத்தியா னுரைப்பேனென்ற தாலது
தன்னையோதின ளுளு முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (1)

மன்னர்மூஸா நபிக்கொரு மானிடன்
மாறு செய்தவன மாண்டடக் காத்திரு
தென்னவேயிறை யென்னடி யானிடத்
தேகிநீர்கப னிட்டடக் கும்மவ
னுன்னியநபி பேர்தவு ரூத்திற்கண்
டோதினான் ஸலவாத்தொன்ற தாலது
தன்னையோதின னாளு முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (2)

நாதர் மூஸாநபிதான் கியாமத்து
நாளில்நாவினில் தாகம் வாராமலே
யோதவேயிறை யேயறியேனதற்
கோதயாறப்பே யென்றுரை யாயெனத்
தூதராமிற ஸூல்ஸல வாத்தைநீர்
சொல்லுந்தாகம் வாராதெனச் சொன்னதால்
தாதனென்னைநீ ராளு முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (3)

உங்கள் தீன்வழி யாயிருந் துங்கள்பே
ரோதக்கேட் டுடனே ஸலவாத்தினை
புங்கமா யுரையாத பகீலனைப்
போல்பகீல னிலையெனத் தேவரீர்
சங்கை நாவுகொண் டோதின தாலது
தன்னையோதவுந் தந்துங் கபுறினில்
தங்குநாளென்னை யாளு முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (4)

காட்டுமாநபி யேயுமைத் தான்பிணை
கானகத்தினில் வைத்தினியான்வர
மாட்டேனாகி லுமதும்மத் தானவர்
வள்ளலே யுங்கள் பேர்சொல்லக் காதினிற்
கேட்டுமேஸல வாத்துரையார் வழிக்
கேட்டிலாவேனென் றோதினதாலும்மைச்
சாட்டினேனென்னை யாளு முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (5)

மெய்குருனை விரித்திறை யேவின
வேதவாய்மை விலக்குகன்னுசுகை
சிக்கிராப்பக லாய்ப்பெரும் பாவமே
செய்தனி யானடி யேனென்ன செய்குவேன்
மக்கராஜ முஹம்மதே நும்ஸல
வாத்தை யோதும் வரிசையினு லென்றன்
ஸக்ருத்தினி லானு முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (6)

துஞ்சுநாளுங் கபுறிலடங்கியே
சோருநாளுங் கியாமத் தமளியா
லஞ்சுநாளு மஹஷறிலே அதா
பான நாளு மடியா ரனைவருங்
கெஞ்சுநாளு மிறைவனே காரென்று
கேட்குநாள் முஸ்தக் கிமெனும் பாலத்தில்
தஞ்சநீரென்னை யானு முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (7)

தம்பிரான் சது வானத்துச் சூரியன்
தன்னையேசவ ளத்துயர் வாகவே
முன்புகாட்டி நிறுத்துமப் போதலை
மூளைவெந்து மயங்கி அந்தோவென
வெம்பியேயழு நாளைமஹ்ஷறு
வேளையாள்பவர் நீரன்றி வேறில்லை
தம்பநீரென்னையானு முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (8)

வாருலாவு மடமயி லாசியா
மங்கைமாது மறியமுமேமணக்
கோருலாவி யுமக்கிறை செய்மணக்
கோலமாய் மஹ்மூதினி லேறிப்பொன்
னூறுலாவி வருந்திருக் காட்சியு
முண்மையாதி தீதாறையுங் காணவே
தாருநீரென்னை யானு முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (9)

அல்லெல்லாநடங் தேகடங் தெழுவா
னம்பரத்துயர் வாகியப்பாலறு
ஷில்லல்லாமுன மத்தஹி யாத்தையே
யியம்பவாதி திருவுள மானதாற்
சொல்லெல்லாம் ஸலவாத்தும் ஸலாமுமே
சொன்னதாலதை யானுமியம்பினேன்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே (10)

ஸலவாத்துப் பாட்டு

முற்றிற்று.

---

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

பாத்திமா நாயகி அவர்கள் பேரில் மேலப்பாளையும் ப. உதுமான் லெப்பை கலீபா ஸாஹிபு அவர்களா லியற்றப்பெற்ற

# முத்துமணி மாலை

## இன்னிசை

உத்த பொருள் பிஸ்மிகொண்டு முட்பொருள் அல்ஹம்துகொண்டும்
சுத்த நபியுல்லாமேற்றுய்யஸல வாத்துக்கொண்டும்
முத்திலுதித்த பாத்தி மத்தொளிவைப் போற்றிசெய்து
வெற்றி பெறு மின்னிசைக்கு வேந்தனருள் காப்பாமே (1)

ஆலநபியின் பதமும் ஆலஸுஹா பின்பதமும்
கோல ஹஸன் ஹுஸைனின் கோகநகமாம் பதமும்
வாலை குரு முஹியித்தீன் வரிசையுள பொற்பதமும்
காலமெல்லாம் கல்பிலுான் றிக் கருதிப்புகழ்வேனே (2)

ஸெய்யிதி றஸூல் நபிக்குச் செல்வச்சிரோன்மணியாய்
வையகத்திற் பெண்களுக்கு வரிசையுள்ள கண்மணியாய்த்
துய்யப் பிரகாசமதாய்த் தூண்டா மணிவிளக்காய்
கைருக வந்துதித்த கருணையுள்ள பாத்திமத்தே (3)

வெற்றிபெறச் செய்யுமுத்தே மேன்மைதர வந்தமுத்தே
முத்திதந் தாளுமுத்தே முஃமீனிரு வாகமுத்தே
சித்திஜெய மாகுமுத்தே செல்வந்தந் தாளுமுத்தே
நற்றவத்தி லாகுமுததே நவநீத பாத்திமத்தே (4)

முத்தா லுதித்தமுத்தே முஹம்மதின் றஸூலின் முத்தே
கத்தாக் குவந்த முத்தே கடாட்சந்தந் தாளுமுத்தே
சித்தா யுதித்த முத்தே சீர்கதீஜா பெற்ற முத்தே
வற்றாக் கடலின் முத்தே வாழ்மயிலே பாத்திமத்தே (5)

முஸ்தபா செல்வ முத்தே முழுமணியாய் வந்தமுத்தே
விஸ்தாரக் கையின் முத்தே விரியுஞ்சுட ரானமுத்தே
கஸ்திகளை நீக்குமுத்தே கவலையறப் போக்குமுத்தே
முஸ்தகி மானமுத்தே முஹப்பத்துள்ள பாத்திமத்தே (6)

முத்திதர வந்த முத்தே முச்சுடர் பொதிந்த முத்தே
வெற்றிக்கரு ளாகுமுத்தே வேதமணியான முத்தே
சுத்திசெய்து வாழ்த்து முத்தே சோதி யொளி வீசுமுத்தே
புத்திமதி யுள்ள முத்தே பூபதியே பாத்திமத்தே (7)

முத்துநவ ரத்னமுத்தே முழுமணிய தானமுத்தே
கொத்துவயி ராணிமுத்தே கோர்வைக்கழ கானமுத்தே
தத்துவத் தவத்தின் முத்தே தாபரந்தந் தாளுமுத்தே
பத்தினியாய் வந்தமுத்தே பைங்கிளியே பாத்திமத்தே (8)

ஆசையினன் புள்ளமுத்தே அஞ்சுமுத்தி லானமுத்தே
ஓசைமணி முத்தே யொளிவுக ணிறைந்த முத்தே
ஹாஷிங் குலத்தின் முத்தே ஹாதீயருள் பெற்ற முத்தே
வாசமுள்ள சுத்தமுத்தே வாழ்வுதரும் பாத்திமத்தே (9)

அலியுல்லாக் குகந்தமுத்தே அஹ்லுபைத்தி லுற்றமுத்தே
வலியபொரு ளானமுத்தே வள்ளலாய் வந்த முத்தே
சலியா தருளுமுத்தே சந்தோஷந்தந் தாளுமுத்தே
மெலியாம லாக்குமுத்தே மேன்மைதரும் பாத்திமத்தே (10)

கலிதீர்க்க வந்தமுத்தே காட்சிகள்தந் தாளுமுத்தே
தலீல்செய்து காக்குமுத்தே தாய்போலே பேணுமுத்தே
சலிப்பனைத்தை நீக்குமுத்தே ஷபா அத்துச் செய்யுமுத்தே
கலிமாவிற் சேர்க்குமுத்தே கண்மணியே பாத்திமத்தே (11)

அழியாக் கடலின் முத்தே அலைகடலி னணிமுத்தே
தெளிவாங் கடலின் முத்தே திருவருளைப் பெற்றமுத்தே
ஒளிவாங் கடலின் முத்தே யோலைசதருஞ் சுண்டுமுத்தே
எளியோரைக் காக்குமுத்தே யிரக்கமுள்ள பாத்திமத்தே (12)

சிரணிந்த செம்மைமுத்தே சிறப்பருள் தந்தாளுமுத்தே
காரண நிறைந்த முத்தே காவலாய் வந்தமுத்தே
தாரணிய தாளுமுத்தே தவ்ஹீதாய் நின் றாளுமுத்தே
பூரணம தானமுத்தே பூங்கிளியே பாத்திமத்தே (13)

சாதிமணி யானமுத்தே ஷம்ஸொளிபோல் வந்தமுத்தே
சோதியொளி வானமுத்தே துய்யப்பிர காசமுத்தே
ஆதரவு செய்யுமுத்தே அனுதினமுங் காக்கு முத்தே
மாதாவாய் வந்தமுத்தே மனமணியே பாத்திமத்தே (14)

கண்ணின்மணி யானமுத்தே கருணைக்கடலாணிமுத்தே
பெண்ணின்மணி யானமுத்தே பேணிக்காத் தருளுமுத்தே
திண்ணமா யாளுமுத்தே தீட்சையுந்தந் தாளுமுத்தே
நிண்ணயம தானமுத்தே நிரப்பமுள்ள பாத்திமத்தே (15)

அலங்கார மானமுத்தே ஆணிக் கோவை யானமுத்தே
நலங்காணச் செய்யுமுத்தே நாட்டமெல்லாந் தீர்க்குமுத்தே
பலன்காணப் பார்க்குமுத்தே பாக்யந்தந் தாளுமுத்தே
துலங்கு மருள் பூட்டு முத்தே துய்யவொளி பாத்திமத்தே (16)

சிப்பி நிறைந்தமுத்தே சிதேவி யானமுத்தே
துப்புர வானமுத்தே சூர்யப்ர காசமுத்தே
செப்பவரி தானமுத்தே செல்வஞ் சிறந்த முத்தே
ஹுப்புவைத் தருளுமுத்தே குறைவில்லாப் பாத்திமத்தே (17)

சிக்கறுக்கு முத்தே ஷிறுக்கறுக்குஞ் செல்வமுத்தே
ஷக்கறுக்கு முத்தே ஷறஹுநெறி யார்ந்த முத்தே
மக்கம் பிறந்தமுத்தே மதீனநக ராளுமுத்தே
தக்கபுகழ் பெற்ற முத்தே தாயகமே பாத்திமத்தே (18)

மூலமணி முத்தே முப்பொரு ணிறைந்த முத்தே
நீலமணி முத்தே நிகருக்கடங் காதமுத்தே
வாலைமணி முத்தே வலம்புரிச் சங்கீன்ற முத்தே
கால மெல்லாந் தோற்றுமுத்தே கமாலான பாத்திமத்தே (19)

தங்கமய மான முத்தே தகுத்திற் றரித்த முத்தே
அங்க நிறைத்த முத்தே ஆவலெல்லாந் தீர்க்கு முத்தே
பொங்குங்கட லானமுத்தே புகழ்பெரிதாய் வந்தமுத்தே
சங்கை சிறந்த முத்தே சாதாத்து பாத்திமத்தே (20)

ஆணிக் கோவை யானமுத்தே யணியணியாய்க் கோர்க்குமுத்தே
மாணிக்கம தானமுத்தே மனமணிய தான முத்தே
பாணிக்க வொண்ணுதை முத்தே பவள நிறம் போன்ற முத்தே
ஊணிப்பிடிக்குமுத்தே யுத்தமியே பாத்திமத்தே (21)

நவரத்தின மானமுத்தே நாகரீகம் பூண்ட முத்தே
தவப் பொருளாய் வந்த முத்தே தக்வாக் குகந்த முத்தே
பவக்கடலை நீக்குமுத்தே பாதமேதந் தாளுமுத்தே
மவுனமணி முத்தே மகராஜி பாத்திமத்தே (22)

வேதமணி முத்தே விளக்கொளி விளங்குமுத்தே
நீதமணி முத்தே நிறைந்த பொரு ளானமுத்தே
காத மொளி வீசுமுத்தே கஸ்தூரி வாசமுத்தே
சிதேவி யானமுத்தே ஸிருஜொளிவே பாத்திமத்தே (23)

நல்லாக் நிறைந்த முத்தே நவமணிக ளானமுத்தே
மவ்லா வுகந்தமுத்தே மறைபொருளைக் காட்டுமுத்தே
அவ்லாதைக் காக்குமுத்தே அஸ்வாஜைப் பேணுமுத்தே
தவ்லத்தைதந் தாளுமுத்தே தாயகியே பாத்திமத்தே (24)

வயிரமணி முத்தே வல்லபொரு ளானமுத்தே
உயிருக்குயி ரானமுத்தே உதுமானை யாளுமுத்தே
கைர்செய்து காக்குமுத்தே கண்ணைத் தெளிவாக்குமுத்தே
பயிரைப்போற் பேணுமுத்தே பலனருளும் பாத்திமத்தே (25)

மின்னிஞெளி வானமுத்தே மேன்மைகள் தந் தாளுமுத்தே
நன்னிலையி லாளுமுத்தே நயனந்தெளி வாக்குமுத்தே
கன்னியர்கள் கண்ணின்முத்தே கறையேற்ற வந்தமுத்தே
ஜன்னத்தருள் பெற்ற முத்தே ஸையிதத்தே பாத்திமத்தே (26)

ஹாமீம்நபி செல்வமுத்தே ஹஸன்ஹுஸைனைப் பெற்றமுத்தே
மூமின்கள் போற்றுமுத்தே முஸ்லிம்கள் வாழ்த்துமுத்தே
பூமீதா சாளுமுத்தே புகழ்பெருக வந்த முத்தே
ஆமீனருள் பெற்றமுத்தே அகந்தெளிந்த பாத்திமத்தே (27)

ஸல்லல்லா நன்னபிக்கும் ஸஹபா லடங்கலுக்கும்
ஸல்லிம்ஸல வாத்துடனே சதகால முந்துதித்தே
அல்ஹம்து குல்ஹு வல்லா அடுத்தகுல் அஊதுடனே
நல்லருளைத் தேடினதாய் நாடித்துஆ வோதஆமீன் (28)

ஆதமுதல் மற்றுமுள்ள அன்பியாக்கள் தாளபணிந்து
பாத்திமத்து நாயகியைப் பாடித்துதிப் போர்களுக்கும்
காத்திருந்து காதல்கொண்டு கல்புருகிக் கேட்பவர்க்கும்
ஏற்றமுற்று ஜன்னத்திலே யெல்லோரும் வாழ்கஆமீன் (29)

முத்துமணி மாலை முற்றிற்று.

---

# பக்தி ஆனந்த பாத்திமுத்து மாலை.

காப்பு விருத்தம்.

அல்லலை யொழிக்க வந்நாளாண்டவ னனுப்பவந்த
வல்லரா முஹம்மதீன்ற வஞ்சி பாத்திமா தன்மேல்
நல்ல பாத்தி மாமுத்து மாலையை நவில்வதற்கு
சொல்லருங் கடவுள் பாதந் துணைசிரஞ் சூடுவாமே

லாயிலாஹ இல்லல்லாஹு லாயிலாஹ இல்லல்லா
லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லா

பைத்து.

முபஸ்மிலன் முஹம்திலன் முஸல்லியன் முஸல்லிமா
அலன்னபீவல் ஆலிவல்லஸ் ஹாபிஸித்தி பாத்திமா (லா)

மறுஹபன் வமறுஹபன் அஹ்லன்வஸஹ்லன் தாயிமா
லில்முஸ்தபா வல்முறுதலா வபுனுகுமா வல்பாத்திமா (லா)

ஆதியான நாயனுக் கடங்கலான புகழுமாம்
நீதியான நபிதமக்கு நித்தமும் ஸலாத்துமாம் (லா)

பறக்கத்தான நாயகி பதூலெஸஹறு ஸித்தினு
ஹறக்கத்தான ஸல்லத்தை யகற்றிவைப்பீர் பாத்திமா (லா)

தங்கமான தௌலத்தே தயாளமான றஹமத்தே
பங்கமான பாவத்தை பறக்கவைப்பீர் பாத்திமா (லா)

தனுவுக்குரிய தாயகி தவாபுக்குரிய நாயகி
தானியில்லான் தான்புகழும் தாஹிமகளாம் பாத்திமா (லா)

ஜாகுபெற்ற அலியுல்லாவின் ஸாதியான செல்வியாம்
ஷாஹுல் ஆலம் ஷாபிஹிய்யின் ஸந்ததியாம் பாத்திமா (லா)

ஹஸன்ஹுஸைன் வமுஹ்ஸினை அழகாகபெற்ற மாதாவே
கஸ்தியான கருமம் நீக்கி காத்தருளும் பாத்திமா (லா)

காலிக்குகந்த கண்மணி கைருன நபியின் கபிதத்தே
மாலிக்கான மன்னரே மஹருஜிபெற்ற பாத்திமா (லா)

தருமம் மிகுந்த தாபரமே தயவுசெய்யுந் தருணத்தில்
வறுமம் பண்ணும் வம்பரை வதைசெய்வீர்கள் பாத்திமா (லா)

தாத்தின்னொளியில் லுதித்தவொளிவால் தரித்தவொளிவே நாயகி
காத்திம்நபியின் பிலுஹத்தே கைருன்னிஸாவே பாத்திமா (லா)

றஹ்மத்தான றஹ்மில்னின்றும் ரட்சிப்போ ரனந்தம்பேர்
தகுமத்தான குதுபுமார்கள் தரித்தஸித்தி பாத்திமா (லா)

ஸஹ்ருபீவி ஹீனத்தால் ஸமானமற்ற நாயகி
துஹ்றத்தாக துதிக்கும்நாயன் துய்யஸித்தி பாத்திமா (லா)

ஸுவர்க்கந்தன்னில் ஸுறத்தாய் துலங்கிகின்ற நாச்சியார்
எவர்க்கும்பாவா வானஆதம் ஏகிகண்ட பாத்திமா (லா)

சிரஸில்தாஜும் கழுத்தில்சவடி சிறப்பாய்ரண்டு காதிலும்
சிறக்கத்துலிக்கப் போட்டுத்துலங்க சிறந்தசித்தி பாத்திமா (லா)

சந்தல்மணமாம் அந்தத்தாஜு ஸாஹிபுல் பலீலத்தி
அந்தஸுறத் தில்லமைந்த ஐவராகும் பாத்திமா (லா)

லல்லத்தான சொல்லைனீக்கி ஷறஹின்வழியில் கைறைநல்கி
இல்லத்தான மருளைப்போக் கிடேற்றம் செய்யும் பாத்திமா (லா)

தையிபான அப்துல்லாதன் கூடப்பிறந்த காஸீமாம்
ஸைனபும்முக் குலுதுமாம் வஸைனுறுகையா பாத்திமா (லா)

லில்லில் லிவாவில்சேத்தருளும் சித்தமான ஹலாத்தில்
அல்லலகற்றி யாண்டருளும் ஆதிஸித்தி பாத்திமா (லா)

அறுஷிடத்தில் அலிதமக்கு அமரர்கூடும் மஜ்லிஸில்
கருதிபெறவே மங்களக் கலியாணஞ்செய்த பாத்திமா • (லா)

கையில்குறித்த மஹர்தமக்கு கோமானினைத்த ஷபாஅத்து
ஜபானபெண்கள் பாவங்களை யழிக்கும்ஸித்தி பாத்திமா (லா)

பாத்திமாவில் மகள்மகவே பாத்திமாவில் மகந்தனக்கு
காத்திமான நபிமுடித்த கண்குளிர்ந்த பாத்திமா (லா)

குர்றத்துல் ஐனனியாம் குறைஷிக்குலத்தின் தீபமாம்
தர்றுன்வதமறத் துல்கதீஜா தங்கமகளாம் பாத்திமா (லா)

கறமலிய்யுல் லாதமக்கு காதலி யிருக்கையில்
ஹறுமதாகும் மறுபெண்முடிக்க அறியும்ஸித்தி பாத்திமா (லா)

லய்ஸலீ ஷய்வுன்ஸிவாக்கி லாயிகான் ஹலாத்தில்
கையைப்பிடித்து காத்திரிய்யில் காட்சிகாட்டும் பாத்திமா (லா)

மலக்கு ஜிப்றயீலைக்கண்டு மனத்தால் சொன்ன சொல்லுக்கு
கலக்கமகற்றி ஸித்தீகறிந்து காட்சி பெற்ற பாத்திமா (லா)

நாச்சியாரின் மதஹைறவோது நாட்டந்தீரும் நாள்தோறும்
ஹாஷிமாம் மன்றுட்டஞ் செய்யும் அரசிஸித்தி பாத்திமா (லா)

வரிசையான ஆயிஷாவும் வஸயால்வார்த்தை சொன்னதால்
பிரிஸமாக நபியைமேலாய் பேசும்ஸித்தி பாத்திமா (லா)

ஹாதியான வழியிலருளும் ஹாவுவாவு ரண்டையும்
காத்திமான அப்துல்லாவை கார்க்கும்ஸித்தி பாத்திமா (லா)

லாமலாத லீ ஸிவாக்கி லாஸிமாலி வாவினில்
ஆமதாக்கி ஹலாத்துல் பகாவில்லாக்கும் பாத்திமா (லா)

ஏழைமனுக்கள் கேட்கும் துஆவை ஏற்றுக்கொள் யாபாத்திமா
நாளைமஹ்ஷற் வேளையில் நஜாத்தைத்தருவீர் பாத்திமா (லா)

வஸ்ஸலாமு மின்ஸலாமின் மஹ்ஸலாத்தின் தாயிமா
அலா அபீக்கி வஅலைக்கி ஆலிஸித்தி பாத்திமா (லா)

காலஹாதா யிபுனுமன் கலீபத் ஷெய்கு பூக்கோயா
குதுபுஸ்ஸமானி பஹுலுல்லா ஸிப்திஸித்தி பாத்திமா (லா)

பக்தி ஆனந்த பாத்திமுத்து மாலை

முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

சென்னைப் பட்டணத்தில் பிறந்து வளர்ந்து யாழ்ப்பாணம் போய் தமிழ் இலக்கணம் இலக்கியம் படித்து தேர்ந்தவராயும் முஹியத்தீன் புராணம் படித்துத் தேர்ந்த மஷாயிகாயும் விளங்கும்

பதுறுத்தீன் புலவ ரவர்கள் பாடிய

# முஹியித்தீன் முனாஜாத்து

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அலிபதின் அஸ்லாய் நின்ற அட்சரஞ் சுழித்து வீசிப்
பொலியுறும் இஷ்குஸாத்துட் புதந்துஹே மீமதாய்நின்
றலிபெனும் இஷ்குமீறி அஹதுமீம் அஹ்மதான
மெலிவில்லா சிபத்துள் மீமாய் வெளிதரு முஹியித்தீனே (1)

பேயலிபதனிற் சேர்ந்து பிரிந்திடும் பஹ்றுதன்னில்
ஸேயுடன் மீம்ஹேயான சிர்ரதாம் வலம்புரிக்குள்
ஹேயினுக் கிஃறுபின்றிக் கிளம்பிடுந் தொனிக்குட் கண்ணே
பேயெனும் பகாவு பெற்ற பேரொளி முஹியித்தீனே (2)

தந்தையுந் தாயுந்தங்கள் தாமரைப் பதமேயல்லா
லெந்தனக் கொருவரில்லை யென்மனத் துயரந்தீரக்
கந்தமென் கதத்தைநாளுங் காணவே காக்ஷியாகத்
தந்தருள் கிருபை செய்வீர் ஸாஹிபே முஹியித்தீனே (3)

தவாபுள அமல்கள் செய்யத் தன்னபு ஸறியாமுடன்
ஹவாநபு ஸதனிற்சிக்கிக் கலங்கியே யலைந்திடாமல்
தவாபெனும் அமலிற்சேரத் தமியனைக் காருமையா
தவாபதாந் திக்குறுக்கெல்லாந் தலீலருள் முஹியித்தீனே (4)

ஜெயமணிக் கொழுந்தேயெங்கள் ஸையிதே முஸ்தகீமே
பயலிவ னுங்கள் பாதம் பக்தனென் றறியவேதா
னயமிகு ஷம்ஸ்ஸாத்துள் நடுவினிற் றுணைநிற்கும்
புயமுக மதயேகாட்டும் பூரண முஹியித்தீனே (5)

ஹையென நிறம்பியெங்கும் கையுமாய் நிலைநின்றோரே
வையமீ தடிமையென்றன் மனதினுட் டுயரந்தீரச்
செய்யினுங் கிருபையின்னே செப்பினே னுரைத்தேனிந்தப்
பையலைக் கிருபைக்கண்ணாற் பார்த்தருள் முஹியித்தீனே (6)

கபியெனும் ஸாத்தினாசை கல்பினில் நிலைநிறுத்தி
கபியெனும் ஸாத்துதன்னைக் காணவே காக்ஷிதந்து
கபியெனும் ஸாத்திற்சேரக் கருணையுங் கிருபைசெய்வீர்
கபியெனும் மகாம் அதனில் ஹாலிறே முஹியித்தீனே (7)

தம்மலி பதனிற்சேர்ந்து தவுலத்தை செலுத்தநாடி
ஹூம்மெனுங் கோட்டைக்குள்ளே குறித்தமந் திரியதான
முஹம்மது நாமம்கல்கில் முடுகலிப் பாலனாலென்
றெம்மிறை புகழும்ஷைகே யெங்கள்யா முஹியித்தீனே (8)

தௌக்கனு பவிக்கநாடி தம்மதி ஹுறவுகூடிப்
பௌக்கெனும் பார்வையோடிப் பத்தியே உறுஜூதேடி
ஷௌக்கெனும் றாஹூசாடி ஷம்ஸூதாத் ததனிற்கூடி
கௌபில்லா நுஸூலதாகக் காட்டும்யா முஹியித்தீனே (9)

றப்போடு நபியுல்லாதான் ரகசியம் பேசும்போது
ஹூப்புட நுமது நூரிற் குதுபதாய்க் கல்குக்கெல்லாம்
நட்புறு முமதுபேரர் நாமமு முஹியித்தீனென்
றொப்பிலா விறைவன் சொல்ல வுதித்தயா முஹியித்தீனே (10)

ஸாஹிதீனொளிகள் மற்றும் சகலமாய் குதுபினோர்க்கும்
வாஹிதாம் கௌஸாமென்ன வல்லவ னமைத்தசோவே
ஜாஹிலென் றெனைத்தள்ளாமற் றவமுறு மகாமுலாஹூத்
தாகிய தௌக்கையென் னுட் டந்தருள் முஹியித்தீனே (11)

ஸீனெனுங் கண்ணாடிக்குட் சிறந்தநூன் கோலமாகத்
தானெனும் வடிவுகொண்ட தாஸிமா நபியின்பேரர்
வானெனும் ஸனவுபரியுள் வாயிலைத் திறந்துகாணப்
பானெனும் கிருபைக்கண்ணாற் பார்த்தருள் முஹியித்தீனே (12)

ஷம்சொடு கமர்நுஜூமுன் தன்மனுமலக்கும் ஜின்னு
மும்பெய ருரைக்கலுற்றா லுடனது வணக்கஞ்செய்யும்
நம்புத லும்மை யென்றும் நாடியே யிருக்கும் பைய
லெம்பிழை பொறுத்திப் போதி லிறங்கும்யா முஹியித்தீனே (13)

ஸபுறில்லாத் தவக்கல் மற்றுந் தவமது நினையாப் பையல்
புவிதனிற் புலம்பு மாசைப் புல்லனென் றிகழ்ந்து விட்டா
லிவணின்மற் றொருவரில்லை யென்றுயர் தீர்ப்பதற்கே
யவையறிந் திரங்கும்கௌஸூல் அஃலம்யா முஹியித்தீனே (14)

மைபுள துன்யாவெண்ண நடையினு லாசைமீறிப்
பொய்தனை மிகவுங்காட்டிப் புல்லரோ டுறவுசெய்து
ஐபுறு ஸுவால் செய்யாம லடிமையென் றனக்குமுங்கள்
கைமுத லதுதந்தென் றுங் காத்திடு முஹியித்தீனே (15)

தாஸிமா நபியுல்லா தம் சங்கையாம் வஜுஹுக்காகப்
பாஸிக்கென் றெனைத்தள்ளாமல் பனுவுல்ப னுவமென்னும்
ஆசிலா மகாமின் ஹாலை யடிமையுள் நடத்தல் செய்வீர்
வாஸிலா மொலிகட்கெல்லாம் வள்ளலே முஹியித்தீனே (16)

ஞல்மது மிகவுஞ்செய்த தோசினா னுற்றங்கள்
கல்பதின் கிருபையாலே கதிபெறவேண்டுமல்லாற்
சொல்வதற் கொன்றுங்காணேன் துய்யவ னெளியிற்சோ
நல்குநுங் கிருபையின்னே நாயக முஹியித்தீனே (17)

ஐனது லாத்துஜனி யரூபமாய் ஸிர்ரினுள்ளாய்
ஐனது அவ்வலான அஹ்மது நபியுல்லாவின்
ஐனது ஆரிபான அஹதுதாம் பொருளையென்னுள்
ஐனதாற் காசுஷிகாண அருளும்யா முஹியித்தீனே (18)

கைபெனும் ஸிர்றதான கஸானத்தின் திறவுகோலை
மெய்தரும் பாதைக்கெல்லாம் வெளிதரும் ராஜவாழ்வே
ஐபில்லா தடிமையானும் ஆரிபாம் பதவிசேரச்
செய்யுமே கிருபை யென்பால் ஸெய்யிதே முஹியித்தீனே (19)

பாருல கடிமையானே படுந்துயர் தீர்த்தே யென்னைக்
காருமென் றிரங்கிக் கேட்டாற் காப்பதற் கவதியுண்டோ
நீர்மன மிரங்கிஸாத்தி னிசமதாங் காசுஷிதந்து
பாருநுங் கிருபைக் கண்ணாற் பார்த்திப முஹியித்தீனே (20)

குறுபது லாஹுத்தென்னுங் கோட்டையுட் புகுதச்செய்து
ஷுறுபது தாத்துமாயும் சுகமதாம் ஜதுபுபெற்று
ஹறுபில்லா லாமக்காமின் கனபதி வாழ்வு சேரக்
கிருபைசெய் தருள்வீரென்னுள் ஹிம்மத்தே முஹியித்தீனே (21)

காதிருயிலங்கி நிற்குங் கண்மணி ஸாத்துல்லாவே
ஹாதியா யெவர்க்கும் பாதை காட்டிடு மொலியுல்லாவே
ஓதிய வடிமையானு முமைத்துதித் திருப்பதெல்லாம்
நீதியாய்க் கபூலதாக்கு நினைவெக்கீன் முஹியித்தீனே (22)

காத்தருள் புரிவீர்கௌஸுல் அஃலமே கதியென்றெண்ணி
நேத்திர நினைவினாசை நிதமுமே யுமதுபேரைத்
தோத்திர மாகச்சொல்லி துதித்திட வடிமை யென்னுட்
பார்த்தருள் கிருபைசெய்வீர் பாஹிமே முஹியித்தீனே (23)

லாமது லிகாவாய்நின்ற ஸாத்தெனு மிர்அத்துள்ளே
நாமவ னாகநிற்கு நாயகன் ஹுக்குமினாலே
ஆமெனு மவுத்துவேளை அஹ்தியத் திஸ்மையென்னுள்
நேமமந் திரமாய்நிற்க நினைவருள் முஹியித்தீனே (24)

முத்தினுள் ளுருவாய்நின்று முழங்கிடும் ஸாத்துல்லாவே
யெத்திசை புகழுமுங்க ளிருபதத் துணையைநாடுஞ்
சித்திர வடிமையென்றன் சிந்தையுட் கலக்கந்தீரப்
பத்திரக் கிருபைக்கண்ணாற் பார்த்தருள் முஹியித்தீனே (25)

நூனது மகுபியாகி நூரதா யிருக்குங்காலம்
தானெனு மிஸ்மைநாடி ஸாத்தெனும் இஷ்க்குப்பொங்கி
யானமுத் தலக்கதான அஹ்மது நபியுல்லாவின்
நூனினுள் சிபத்தாய்நிற்கும் நூறதா முஹியித்தீனே (26)

வல்லவ னவாவினாலே வந்திடு மஹுஹாறுன
சொல்லுமவ் வுயிர்கட் கெல்லாந் தூயனன் முறுஷிதாக
நில்லுமென் றிறையோ னும்மை நிறுத்திய மஹ்பூபேயென்
னல்லலை நீக்கியென்று மருள்செய்வீர் முஹியித்தீனே (27)

ஹவாவெனு மாயை தன்னாற் காட்டியே மறைப்பதெல்லாம்
ஹவாவெனு மேலைவாயிற் கடந்தப்பா லறிந்தபேர்க்கு
ஹவாவவ னல்லாதில்லைக் காகூியாம் ஹர்பதாகும்
ஹவாவெனும் பர்கைநீக்கிக் காத்தருள் முஹியித்தீனே (28)

லாமக்கா னாகியெங்கும் ராப்பக லற்று நின்ற
மீமுலா மேடைவீதி வேந்தனுங் குடியுமில்லா
நாமவட் சரங்களற்ற ஸாத்தெனும் பொருளைக்காண
ஆமெனுங் கிருபை செய்வீ ராரிபே முஹியித்தீனே (29)

ஏகமா யிலங்கியெங்கு மிறுந்தர சாளும்பீரே
யாகமா யொலிகட்கெல்லாம் அருள்பெற வுதித்தஷம்ஸே
யோகமா யேறும்வாசி யுச்சியி னிறைந்தஞான த்
தேகமாம் வாயில்தன்னைத் திறந்தருள் முஹியித்தீனே (30)

மத்தது றாஹின்கோலம் வரும்ஹம்ஸுு கல்பின் கோலம்
ஷத்தது கல்பதாகத் தரித்திடுங் கோலமென்ன
நற்றவுப் பொருளின்சிர்ரை நாடிநா னறியத்தங்கள்
சித்தம திரங்கியன்பு செய்தருள் முஹியித்தீனே (31)

அந்தமு மீறுமில்லா னடங்கலும் கைபதாக
வந்தரு ளதமத்தென்னும் வளைந்தஸா த் திருளின் கோலந்
தொந்தமாய்ச் சுக்கூனுய்நின்ற துல்லிப மறிந்தகோவே
யெந்தனை யிரங்கியாளு மேகமா முஹியித்தீனே (32)

ஆவது வொன்றுமில்லா தடிமையி லுசையாலே
யாவல்கொண் டுமதுபாத மடிக்கடி புகழநாடிப்
பாவல்செய் திடுமென் சொல்லிற் பகர்பிழை பொறுத்தென்னாளுங்
காவல்செய் திடுவீரெங்கும் காதிறே முஹியித்தீனே (33)

ஆண்டவர் தமக்குண்டான அடிமையின் செயலாற்சொல்லாற்
பூண்டதோர் பிழைகளெல்லாம் பொருத்தரு ளெந்தாய்தந்தை
மாண்டவர் பிழைபொறுத்து வல்லவன் லிக்காவிற் சேர்த்தே
யாண்டருள் கிருபைசெய்வீர் அஹ்துயா முஹியித்தீனே (34)

எந்தனக்கறிவு தந்தோ ரிறைகுர்ஆ னோதித்தந்தோர்
வந்தனைக் கிருபைவைத்தோர் வரும்பொரு ளுள்ளமீந்தோர்
தொந்தமாங் கிளைஞரெளா சொற்பிழை பொருத்தெந்நாளுந்
தந்தருள் கிருபைசெய்வீர் ஸமதுயா முஹியித்தீனே (35)

முஹியித்தீன் முனாஜாத்து

முற்றிற்று.

---

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# காஜா பந்தே நவாஸ் முனாஜாத்து

## கலித்தோடய விருத்தம்.

அஹ தான ஆலம்ஸ கீருனதில்
அமல் கொண்ட அல்ஹம்து லில்லாஹிநீ
ஷுுஹூதும் ஸுுஜூதும் மவுஜூதுநீ
தொடரான ஸையிது பந்தே நவாஸ் (1)

பகா வான குதறத்து ஹலறத்திலே
வசமாக வெழுந்தேறு மஹ்மூதரே
சகாவான அவ்லாது வழிவந்தவர்
தயவான ஸையிது பந்தே நவாஸ் (2)

தாயார் வயிற்றிற் பிறந்திடு முன்
தாயோடு பஞ்சை விழுங்கச் சொல்லி
மாயாது லங்கோ டுடன் பிறந்த
மயமான ஸையிது பந்தே நவாஸ் (3)

ஸவா புள்ள செயல்செய்து வருமேறவே
ஸலாமும் ஷபா அத்தும் ஸலவாத்திலே
சுவாசத்தில் வஸ்வாஸுதனை நீக்கினோய்
ஜமாலத்து ஸையிது பந்தே நவாஸ் (4)

ஜலாலாய் ஜமாலாய்க் கமாலான ஹால்
தரிப்பான வமல் செய்து அஹ்யானிலே
கலாமான புறுக்கானின் கனியுண்டவா
கைர்செய்யும் ஸையிது பந்தே நவாஸ் (5)

ஹாமீ முஹம்மது ஷபா அத்திலே
கைரு யெனைச் சேர்க்க கைருகுமே
நேமசுஷ ஹார்பீரு கான்வாதாவில்
நிலைகொண்ட ஸையிது பந்தே நவாஸ் (6)

கைர்நோன்பு தொழுகை கலிமா ஹஜ்ஜுடும்
கலப்பற்ற நற்போத குருவானபீர்
உயிர் நின்ற நிலைகொண்ட வுயரவ்லியா
உதவி தரும் ஸையிது பந்தே நவாஸ் (7)

தலீலான தாஹா நபி முஸ்தபா
ஷபா அத்து செய்திடும் ஸகறுத்திலே
கலீபத்துக் கலிமாவின் பொருளானதை
கைர்செய்யும் ஸையிது பந்தே நவாஸ் (8)

ஸாத்தும் மகுபீயிற் செய்தே ஸபூர்
மவுத்துக்கு முன்னே மவுத்தா கிடச்
சேர்த்துப் பெலப்பியும் காஜாவேநீர்
சிறப்பான ஸையிது பந்தே நவாஸ் (9)

றஹ்மானின் வடிவான ஆதமுக்கு
றஹ்மத்தும் பறக்கத்து நீர் செய்குவீர்
பகுமான குல்பறுக் காவினில்வாழ்
பதிவான ஸையிது பந்தே நவாஸ் (10)

ஜமான்மஹ்ஷ றில்கேள்வி கேட்கின்றநாள்
தலைமேற் கதிர்சூடு சுடும் வேளையில்
அமானத அல்ஹம்துக் கொடிநிழலை
யருள் செய்யும் ஸையிது பந்தே நவாஸ் (11)

ஸலாமும் ஷபா அத்து மாகிறத்தில்
தலீல்செய் முஹம்ம தர்ரஸூ லுல்லா
விலாயத்து கைவச மாகியகா
ஜாவெங்கள் ஸையிது பந்தே நவாஸ் (12)

ஷாஹுல் ஹமீதான நாகூரிலே
சந்தோஷமாய் வந்து தெர்ப்பத்திலே
ஸ்தாபித்துத் தன்கோல மறுகோலமாய்த்
தான்வந்த ஸையிது பந்தே நவாஸ் (13)

ஸித்தீக் அபூபக்க ருமறுகத்தாப்
செல்வ ருதுமா னலியாரையு
முத்தி பெற நினைவு மாறாமலே
முறுதான ஸையிது பந்தே நவாஸ் (14)

மூர்ரான பாவங்கள் நாடாமலே
முஹூபான புவியாசை கொள்ளாமலே
ஷர்ரான துனியாவைச் சாராமலே
தயைசெய்யும் ஸையிது பந்தே நவாஸ் (15)

தபகாதி ஜிஸ்திநல் ஸஹுர்வத்தியுங்
தரிப்பான காதிரி வழிநாலுக்கும்
ஸபக்கான போது சுவால்சொன்னவா
தகுமான ஸையிது பந்தே நவாஸ் (16)

ஸில்ஸில் ஸிவாவுக்கொடி நிழலில்
நினைவாகத் தங்கள் முரீதீன்களைச்
சொல்லுங் கலிமா சுவாசத்திலே
துணைசெய்யும் ஸையிது பந்தே நவாஸ் (17)

ஆஷூக்கு மஃஷூக்கு இல்முல் எகீன்
அதபுடன் பீஜத்தி ஐனுல் யகீன்
மஃஷூக்கு லோவில் ஹக்குல் எகீன்
மானமூன்றும் ஸையிது பந்தே நவாஸ் (18)

குர்பத்து ஐனுல் எக்கீன் பதவியை
குதுபாமு ஹியித்தீ னுத்தரவால்
ஷர்பத்து போக ஜமால்வடிவதால்
தயவான ஸையிது பந்தே நவாஸ் (19)

பகுமான லாஹூத்துப் பதியானதிற்
பகலிர வற்றநல் மைதானிலே
சுகமான குல்பர்கா நகர்வாழும்பீர்
துணைசெய்யும் ஸையிது பந்தே நவாஸ் (20)

குல்ஹுவல் லாவான ஸூறத்திலே
குன்னென்ற சொல்நின்ற கோலத்திலே
அல்லும் பகலற்ற மைதானிலே
யருள்செய்யும் ஸையிது பந்தே நவாஸ் (21)

கமலக்கோள் நீர்கொம்பு ஷைத்தான்களைக்
கரந்தோட வெட்டிக் கறுவறுத்து
அமல் செய்து லோகத்தின் மீதிலொலி
யாய்வந்த ஸையிது பந்தே நவாஸ் (22)

லஃனத்துச் செய்கின்ற கன்னுசுடன்
லஈனுக்கு ளாகாமற் காப்பாத்துவீர்
றஹ்மத்தும் நிறைவாக வருசிக்கவே
றஹ்மானின் ஸையிது பந்தே நவாஸ் (23)

மஹ்மூது நபிமுஸ்த பாதம்மையும்
பகுதாது மீறான் முஹி யித்தீனையும்
தருமான நாகூர்ஹ மீதொலியையும்
தயவான ஸையிது பந்தே நவாஸ் (24)

நபிமார்க ளனைவோர்கள் தங்களுடன்
நலமான குதுபுமார் தங்களுடன்
கவிசேரு மவுலியா தங்களுடன்
ஹபீபான ஸையிது பந்தே நவாஸ் (25)

ஓலியான ஸைய்யிது மஸ்ஊதொலி
யுவங் துற்ற கடையநல் லூர்ப்பதியிற்
கலிமாப் பொருள் ஷெய்கு உதுமானுடன்
கைர் செய்த ஸையிது பந்தே நவாஸ் (26)

ஹிம்மத்து கிலுறு அலைஹிஸ்ஸலாம்
ஹிதாயத்துத் தந்தென்னை ரட்சிக்கவும்
உம்மத்து நபிமார்கள் கூட்டத்திலே
யுதவிசெய் ஸையிது பந்தே நவாஸ் (27)

லாமலிபு நடுவான லாஹூத்திலே
லாஇ லாஹஇல்லல் லாவென்ற சொல்
தாமதமில்லாமற் கலிமாவைத்தான்
தரவேணும் ஸையிது பந்தே நவாஸ் (28)

யாஹூயா றஹ்மானே யடியார்செய்த
அமல்பிழை களெல்லாம் நீ பொறுப்பாய்
வாக்குப் பிழைதந்தை தாய்செய்பிழை
வருமென் பிழைகள் பொறுப்பா யல்லாஹ் (29)

காஜா பந்தே நவாஸ் முனாஜாத்

முற்றிற்று.

---

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

பாத்திமா நாயகி அவர்கள் மீது பாடிய

## சரசுவதி மாலை

முன்னே அஹ தானவனே முத்திஉஹ தானவனே
பின்னவனே வாஹிதியாய்ப் பேரொளிவாய் நின்றவனே
தன்னவனே தையானே தாயிம்காயி மானவனே
ஹன்னனே இன்னிசைக்கு ஹையுல்கையூம் காப்பாமே (1)

அறைந்தேன் பிஸ்மிகொண்டும் அல்ஹம் தருளேக்கொண்டும்
உறைந்தபல னூர்நபிமே லுற்றஸல வாத்துகொண்டும்
பறைந்தேநல் பாத்திமத்தின் பாதம் பணிந்தேத்தும்
நிறைந்தபுக ழின்னிசைக்கு நின்மயமே காப்பாமே (2)

கடல்போ லறிவுடைய ஹாமீம்ற சூல்பதமுங்
கொடைமிகுத்த ஆல்தோழர் குதுபியவர்கள் பாதங்களும்
படைமன்னர் பதுரீன்க்ள் பாதங்களு மேபணிந்து
சடையாமற் பாடுதற்கு ஸமதானேன் காப்பாமே (3)

முத்தி லுதித்த முஹம்மதுர்ற சூலுகந்த
பத்தினி கதீஜாபெற்ற பாலக ரிருமூன்றிற்
சித்திமுத்தி யாய்ப்பிறந்த சீதேவி பாத்திமத்தைச்
சிற்றடியேன் போற்றிசெய்யச் சீமானபி காப்பாமே (4)

ஹாதிநபி கண்மணியாய்க் கஸ்தூரி வாசமதாய்ச்
சோதிமணிச் சுடராய் சுபசோபனக் கனியாய்
நீதிமறை யாமதியாய் நிறைந்தபரி பூரணமாய்ச்
சோதிமணி யாய்ப்பிறந்த சரசுவதி நாயகியே (5)

கதீஜா தவப்பொருளே கண்ணின்மணி யேயொளிவே
மதியாத மாணிக்கமே மவுனமணிப் பெட்டகமே
மதியொளிவு போன்முகமாய் மக்கம் பிறந்துசொர்க்கப்
பதிவாழ்வு பெற்றவெங்கள் பாத்திமத்து நாயகியே (6)

வாசத்தாழைப் பூக்கொழுந்தே வாடா மருக்கொழுந்தே
ஆசைமல்லி கைக்கொழுந்தே யன்புள்ள மாங்கொழுந்தே
ஹாஷிங் குலக்கொழுந்தே கதீஜாபீவி கைக்குழந்தை
யேசகல ரும்புகழும் ஏற்றமுள்ளே நாயகியே (7)

பூவே புகழேநற் புண்ணிய சிகாமணியே
பாவையர்க் கெல்லாங்கிடைத்த பாக்கிய சிரோமணியே
ஆவலா யுங்களி னடிமலரை யான்பணிந்தேன்
நாவிலருள் பூட்டுமம்மா நவநிதியே நாயகியே (8)

மந்தரச் சுடரரசே மகுடமணிந் தாளரசே
இந்திரலோ கத்தரசே யிருபதிக்கும் வாழ்வரசே
சுந்திர வடிவழகாய்ச் சூர்யகாந்திப் பூவழகாய்ச்
சந்த்ரவொளி வாயுதித்த சரசுவதி நாயகியே (9)

பொலிவாக எவ்வுயிர்க்கும் பொங்குங்கட லாய்ச்சிறந்து
வலியபொரு ளாயுதித்த வரிசையுள்ள தாயகமே
மெலியாத மெய்ப் பொருளில் மேன்மேலுங் காட்சிகொள்ள
தலீலுதவி செய்தருள்வீர் சரசுவதி நாயகியே (10)

இத்திஹாது கொண்டே யிருபொழுது மோர்பொருளை
நித்தம றவாமல் நினைவுவேறு காமலுங்கள்
ஒத்தாசை யாலடிமை யோர்மைகொண்டு நிற்கநல்ல
புத்திதர வேணுமம்மா பூங்கிளியே நாயகியே (11)

அன்புமிக வுள்ளவெங்க ளன்னையே யென்னளவி
லின்பங்கொண் டருள்புரிந்தே யீடேற்றுந் தாயகமே
நம்புமடி யார்களெண்ணு நாட்டங்கபூ லாகிடவே
செம்பொன்மலர்த் தாளருளுஞ் சிதேவி நாயகியே (12)

பிள்ளைபோ லெண்ணியென்னைப் பேணி யனுதினமுந்
தள்ளையைப்போற் காப்பாற்றித் தர்க்காக்க வேணுமம்மா
உள்ளநா ளெல்லா முகந்துதேடும் பையலையோ
ரெள்ளளவா னாலுங்கண்பார்த் தீடேற்று நாயகியே (13)

கார்மேகஞ் சூழ்ந்து கனத்தமழை யைப்பொழிந்து
பார்மீதி லேபயிர்கள் பலனாகும் பாவனைபோற்
கார்மான மேவுமுங்கள் கருணைக் கண்ணா லென்மீதிற்
கூர்மையுடன் பார்த்தருள்வீர் ஹாப்புடைய நாயகியே (14)

முத்தொளிவுக் குத்தொளிவே முகவஜ்க ரத்தழகே
சுத்தபரி பூரணமே தூண்டா மணிவிளக்கே
புத்தியலங் காரமதைப் பூர்த்தியுற வேயெனக்கும்
சித்தமி ரங்கியருள் சிதேவி நாயகியே (15)

எங்களின்சுற் றங்களுக்கு மென்னுடைய தோழர்கட்கு
முங்களைப்போ லெங்குமுண்டோ உதவியுப காரமுள்ளோர்
நன்கொடையா யென்னுடைய நாட்டப்படி யேயிஹ்ஸான்
முன்கைப் பொருள்தந்தே மிடிமைதீரும் நாயகியே (16)

தங்க மயமே தருமக்குண நாயகியே
பொங்குங் கடலமுதே பொறுமைக் கடலலையே
அங்கங் குளிர்ந்திருக்க அன்பருளு மாதாவே
சங்கைதந் தருள்புரிவீர் சரசுவதி நாயகியே (17)

திங்களொளியே சிறப்புறுஞ் சிருஜொளியே
சிங்க அலிதமக்குச் செகம்புகழுந் தேவியரே
மங்கா மணிச்சுடரே மாணிக்க மெழுந்தலமே
சங்கை யருள்பொங்கும் சரசுவதி நாயகியே (18)

பஞ்சவன் னக்கிளியே பாக்கியப் பசுங்கிளியே
கொஞ்சுஞ்சுவ னக்கிளியே கொவ்வைக்கனி வாய்திறந்தே
இன்சொல் மொழியாக வெனக்குபதே சித்தருளிச்
சஞ்சலங்க ளேத்தவிர்ப்பீர் சரசுவதி நாயகியே (19)

அதியாசை கொண்டிரக்கு மடிமைகளுக் கன்னையெனுங்
கதியா மணிவிளக்காய்க் காசினிய டங்கலுக்கும்
பதிநாலா நாணிறைந்த பரிபூரணத் தேசுடைய
மதிபோ லுதித்தபாத்தி மத்தெனுநன் நாயகியே (20)

தங்கக் குடமே தளும்பாத பாற்குடமே
மங்கலற்ற ஷம்ஸொளிவே மாதளைச் செவ்வாய்க்கிளியே
குங்கும மலரே குளிர்ந்த பன்னீர்ப் பூமணமே
தங்களருளே தருவீர் சரசுவதி நாயகியே (21)

வானத்தினட் சத்திரம்போல் வந்துதித்த பெண்களுக்கு
ஷீனத்துள ஷம்ஸொளிபோற் சிறந்துதித்த நாயகியே
யீனத்தவ றில்லா திருபதியின் வாழ்வு பெறுந்
தானத்துடன் வந்துதித்த சரசுவதி நாயகியே (22)

மெய்யுரை களைமறந்து மேதினியி னாசைகொண்டே
பொய்யுரைகள் பேசும்பிழை போக்கியிந்தப் புத்திரனைக்
கையணைத் திருபதிக்கும் கைருன காட்சிதந்து
சையவருள் சேருமம்மா சரசுவதி நாயகியே (23)

ராஜயோக்ய ரத்தினமே ரஹ்மத்துள்ள நாச்சியாரே
வாஜிபுடன் பெண்கட்கெல்லாம் வள்ளலென வந்தவரே
ஹாஜத்துகட் கெல்லாங் கருணைசெய்ய வந்துதித்த
தாஜுந்நபி யீன்ற கண்ணே சரசுவதி நாயகியே (24)

ஆணிப்பொன் னழகுப்பச்சை யஞ்சுவன்ன மும்நிறைந்த
மாணிக்க மேயெங்கள் மகராஜி பாத்திமத்தே
பூணிப்புட னும்மை புகழ்ந்தருளுக் கென்சிரசைக்
காணிக்கையாய் வைத்தேனம்மா கண்மணியே நாயகியே (25)

மாதர்களை யீடேற்று மகுடமுடி யேதரித்துச்
சாதி மணியாகவ் ஷபாஅத்தருள் பெற்றுயர்ந்தே
ஆதர வாயிந்த அவனிமீதி லேசிறந்து
சோதியொளி வாயுதித்த சுடர்மணியே நாயகியே (26)

நாகரீகம் பேசுமுங்கள் நற்பவள வாய்திறந்து
வாகுட னெனக்குநல்ல வாக்குத்தர வேணுமம்மா
மோகமுறு முச்சுடரே முத்திசித்தி பெற்றிடவே
தாகமெல்லாந் தீர்த்தருள்வீர் சரசுவதி நாயகியே (27)

சொல்வாக் கருள்புரிவீர் சோதிமணி மாதாவே
நல்வாக்குத் தந்திடுவீர் நவநீத நாயகியே
கல்விக் களஞ்சியமே கருணைக் கடாச்சியமே
செல்வப் பொருள்செயமே சிதேவி நாயகியே (28)

நற்செயலிற் காட்சிக்கொள்ள நயனம்விழித் தேநோக்கிக்
கெச்சிதமா யென்றனக்குக் கிருபைசெய்ய வேணுமம்மா
முச்சுட ரில்மோட்ச முறவெனது மீதுமது
பட்சம்வைத் தருள்புரிவீர் பாத்திமத்து நாயகியே (29)

செப்பவரி தானமுத்தே சிவந்திருக்குந் தாமரையே
புட்பராக வெற்பதன்மேற் பூத்திருக்கும் பொன்மலரே
துப்புரவிற் றுப்புரவாந் துய்திற்பரி பூரணமாய்
முப்பொரு ணிறைந்துதித்த மோட்சமுள்ள நாயகியே (30)

வற்று வருட்செல்வமே வாழ்வோங்கு மாகதியே
கற்றவர்க்கு மற்றவர்க்குங் கவிழா மரக்கலமே
உற்றமறைச் சற்குணமே யுதவிசெய்யும் பாக்கியமே
சிற்றடியே னுக்கருள்வீர் சிதேவி நாயகியே (31)

அல்லி மலரே யரும்புவிரி யாமலரே
முல்லை மலரே முகிழ்விரியா மாமலரே
மல்லி மலரே மயமாத ளைமலரே
சொல்லிலடங் காமலரே சோதிமணி நாயகியே (32)

பூக்கு மருள்மலரே புளியாத தேன்மலரே
வாக்குமா றுமலரே வாழைக்குலை யின்மலரே
பார்க்குமிரு கண்மலரே பசிந்தபனி நீர்மலரே
காக்குங்கருணைமலரே காட்சிதரு நாயகியே (33)

வையகத்தி லென்றனக்கு வருத்தம்வந் தணுகாமற்
கையணைத்து கைறுன காட்சியருள் தந்திடுவீர்
பையல்பிழை பொறுக்கப் பாவிமுகம் பாருமெங்கள்
ஸையிதத்தே பாத்திமத்தே சரசுவதி நாயகியே (34)

பெருமையுள்ள ஜத்கதிலே பேரொளிவாய் நின்றோங்கும்
பொறுமைக்கட லாயுதித்த புண்ணியசி காமணியே
தருமக் குணமிரங்கித் தலீலருளித் தாசனுக்கு
வறுமைகளைத் தீர்த்துசொர்க்க வாழ்வருள்வீர் நாயகியே (35)

கைறுந் நபிதமக்குக் கல்புக்கனி யாயுதித்து
கைறுசெய் தடுமைகளைக் கரையேற்றுந் தாயகமே
கைறான மோட்சமதை காதிமுகம் பார்த்திரங்கி
கைறுபெரு கத்தருவீர் கருணையுள்ள நாயகியே (36)

உற்றநவ ரத்தினமே யுயர்ந்த பச்சை மரகதமே
கொத்துமுத்துக் கோமதங்கள் கோத்தவயி டூரியமே
சித்திர மலர்கலந்த செவந்த ரோஜாப் பூச்சரமே
நற்றவத்தின் றாயகமே நவநீத நாயகியே (37)

குத்து விளக்கொளிவே குளிர்ந்தசெஞ்சு டரொளிவே
முத்திக்கு முத்தொளிவே முழுமணிக் கத்தொளிவே
கத்த னருளொளிவே கண்ணின் மணியொளிவே
ஜத்தின் சிறப்பொளிவே சரசுவதி நாயகியே (38)

வற்றாச் சமுத்திரமே வாழும வலம்புரியே
குற்றமற்ற பாற்கடலே குறையாத மாணிக்கமே
சத்த சமுத்திரமே சார்ந்தவர்க்குச் சற்குணமே
சித்தா யுதித்தவெங்கள் சிதேவி நாயகியே (39)

நன்னிலை நாயகமாய் நானிலத்தி லேயுதித்துக்
கன்னியர் திலதமதாய்க் காரணக் கடாச்சியமாய்
மின்னொளிவு போலேயிந்த மேதினியெல் லாந்துலங்க
மன்னானருள் பெற்றோங்கும் மகராஜி நாயகியே (40)

வாடாமல்லிப் பூநிறம்போல் வந்துதித்த மாதாவே
தேடித் தவிக்குதம்மா தினமுமைய லாகுதம்மா
நாடிமுகம் வாடுதம்மா நாட்டம்நிறை வேற்றுமம்மா
வாடிமெலி யாமலேநல் வாக்கருளு நாயகியே (41)

பேறுதா வேணுமம்மா பேணிப்பிழை போக்கு மம்மா
மாராயந் தாருமம்மா மனக்கவலை தீருமம்மா
பாருமம்மா இவ்வேளை பகருமொழி கேளுமம்மா
தாருமம்மா வுங்கள்பாதம் சரசுவதி நாயகியே (42)

வெற்றிபெறச் செய்திடுவீர் வேண்டுமுப காரஞ்செய்வீர்
முத்திக்கரு ளேபுரிவீர் முஹம்மதர்ற சூல்மகவில்
எத்தவத்தி னோர்களுக்கு மேற்றமுள்ள சற்குருவாய்ப்
பற்றிப் பிடித்தேனம்மா பாத்திமத்து நாயகியே (43)

சரணம் பணிந்தேனுங்கள் சன்னதிக்கா ளாக்கியென்னைக்
கருணைவிழி நோக்கியுங்கள் கர்ப்பூர வாசமுள்ள
சொர்ணமொழி வாய்திறந்து சொல்வாக் கருள்புரியத்
தருணமிது செய்தருள்வீர் சரசுவதி நாயகியே (44)

தேடும் பொருளே தெளிவான வுட்பொருளே
நாடும் பொருளே நலமிகுந்த மெய்ப்பொருளே
கூடும்பொரு ளேமனதுட் கொண்டாடி யேதுதித்துப்
பாடும்பைய லுக்கருள்வீர் பாத்திமத்து நாயகியே (45)

மரியாதை யற்ற மனுக்களிழி வாகவென்னைப்
பரியாச மேபுரிந்துப் பழித்துப்பல வாறுரைத்துச்
சிரியாமற் காத்துச் செகத்திற்சக லோர்க்குமுன்னே
சரியா யிருக்கவருள் சரசுவதி நாயகி (46)

ஆலம் படைத்தாளும் அரியறஹ்மான் தூதர்
மூலநபி தங்களுக்கு முப்பத்தைந் தாம்வயதில்
வாலை மனோன்மணியாய் வரிசையுள்ள கண்மணியாய்ப்
பாலகராய் வந்துதித்த பாத்திமத்து நாயகியே (47)

நாதனரு ளாலுலகில் நாலேழ் வயதிருந்து
நீதிறம லான்மூன்றில் நிறைந்தயவ் மஸ்ஸலாதில்
சோதி யொளிநிறைந்த துய்யசுவ னப்பதியிற்
சிதேவி யாப்புகுந்த சிறப்புடைய நாயகியே (48)

காத்திமந் நபிதமக்குங் கண்மணிஹ ஸன்ஹுஸைனுக்கும்
பாத்திமத்து நாயகிக்கும் படைத்தோன் ரஹுமத்துண்டாம்
காத்திமுது மான்றனக்கும் கைருன தாய்தந்தைக்கும்
ஏற்றமுள்ள ஜன்னத்தருள் யாஅறுஹ மர்றுஹிமீன் (49)

எங்கள் றசூல்நபிக்கும் யார்களுடன் றேழருக்கும்
பங்கமற்ற ஆல்களுடன் பாத்திமாச் சரஸ்வதிக்கும்
பொங்கும் ஸலவாத்தும் புகழும் ஸலாமுடனே
மங்களம் ஜெயமங்களம் மன்னுன் றஹுமத்தாமீன் (50)

இந்தமுனா ஜாத்தை யெடுத்துப் படிப்பவர்களுக்குஞ்
சிந்தை மகிழ்ந்தே செவியார கேட்பவர்க்குஞ்
சந்தோஷ மாயிதற்கு ஸகாவத்துச் செய்பவர்க்கும்
அந்தமுள்ள ஜன்னத்தருள் அறுஹமர் ரூஹிமீனே (51)

## சரசுவதி மாலை

முற்றிற்று.

---

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

காயற்பட்டணம், திருபுகழ் பாடிய மகாவித்வான் அருள்வாக்கி காசிம் புலவரவர்கள் பூவாற்றிலிருந்து நபிநாயகம்பேரிற் பாடிய

# இன்னிசை

முன்னவனே அஹதியத்தாய் முத்தியுஹதத்தாகிப்
பின்னவனே வாஹிதிய்யாய்ப் போான மெய்ப்பொருளே
தன்னவனே தயாபரனே சராசரமாய் நின்றவனே
மன்னவனே யின்னிசைக்க வல்லவ நீ காப்பாமே

ஆதியொளி வாகியகி ரண்டபகி ரண்டமொரு
சோதியொளி வாகிநின்ற தூண்டா மணிவிளக்கே
யோதியுணர் ஞானகலை யோலமிடும் ஸெய்யிதப்துல்
காதிரேநல் ஹாஷிம்குல காஸீம்முஸ்த பாநபியே (1)

மெய்யெடுத்த நாண்முதலாய் மெய்யறியேன் வெட்டவெறும்
பொய்யெடுத்த பாவியைநும் பொன்னடிக்காள் கொள்வீரே
மையெடுத்த சோனைமழை மாரிவெள்ளந் தூவதுஆக்
கையெடுத்து வேண்டுமக்கா காஸிம்முஸ்த பாநபியே (2)

பொய்மாற வென்னெருகாற் பொங்குபசும் புண்ணமுற்ற
மைமாற வேயருட்கண் வைத்திடுநா ளெந்நாளோ
பெய்மாரி நோக்கியிந்தப் பேருலகம் வேறுமொரு
கைமாறு செய்வதுண்டோ காஸிம்முஸ்த பாநபியே (3)

பூக்குந் தடநிழலும் பூவாது பூவின்முகில்
ஆக்குங் குடையுமன்பி யாக்களுக்கு முண்டாமே
போக்குங் கொடுந்துயரம் பொறுக்கும் பொறையபயங்
காக்குங்கரு ணேசம்க்கா காஸீம்முஸ்த பாநபியே (4)

ஒருகாலமும் மணுகா வொருகால் பிணியகல
வருகால மெக்காலம் வருகா லறியேனே
குருகாலுஞ் செங்கையொரு கோதைதசை யூட்டிவைத்த
கருகால முண்டவெங்கள் காஸிம்முஸ்த பாநபியே (5)

சங்கை படைத்தவொரு தாய்க்கண்மகன் ருனிழந்த
வங்கை படைத்ததிற மார்க்குஞ்செய வுண்டாமோ
கொங்கை படைத்தவஞ்சிக் கொப்போடுந் தாருவரக்
கங்கை படைத்தவெங்கள் காஸிம்முஸ்த பாநபியே (6)

கோலூற்ற மன்னரிட்ட கோட்டைபதி ஞன்குமென்றூர்
வேலூற்ற மானசமர் வென்றுதங்கைக் கொண்டோரே
பாலூற்று நீலாற்றுப் பள்ள வெள்ளம் வெள்ளியனைக்
காலூற்று மக்கநகர் காஸிம்முஸ்த பாநபியே (7)

வென்றேறும் வேலரசர் வீரமுடி யாசனத்திற்
சென்றேறுங் கஞ்சமலர் சேவடி தந்தாளுமையா
நன்றேறு முத்திதரு ஞானக்கொழுந் தேதுளசிக்
கன்றேகண் சோலைமக்கா காஸிம்முஸ்த பாநபியே (8)

ஐதூக்குங் கையினகன் ருள்வேட்ட மாடுமழை
மைதூக்கும் போதரிக்கண் மாதருக்கா ளாவேனே
பைதூக்கும் பாந்தளுணப் பாழ்நரகம் புக்காமற்
கைதூக்கிக் கொள்ளுமக்கா காஸிம் முஸ்த பாநபியே (9)

வேட்டுங் கனவிலொரு வேளைவெளி யாகவந்து
நாட்டுப் பரகதியு நல்கிடுநா ளெந்நாளோ
தீட்டும்புக ழாபரணத் தீன்தீன்மு ஹம்மதெனக்
காட்டுங்கதி கோட்டுமக்கா காஸிம் முஸ்த பாநபியே (10)

விண்பார்க்குஞ் சாதகம்போல் வேண்டியுமை மீண்டுமிசைப்
பண்பார்க்குஞ் சேணசுணப் பட்சியெனவுந்தேடி
யென்பார்க்கு மேழைதனக் கேயிரங்கி யெவ்வளவும்
கண்பார்த் தருளுமக்கா காஸிம்முஸ்த பாநபியே (11)

பூரியநோ யென்னெருகாற் புண்ணிருந்து நொந்தழற்ற
வீரியமே பொன்றியுள்ளம் விள்ளா தயர்வேனே
பேரியபேர் கொண்டவுங்கள் பேருடையோ னுக்குவரக்
காரியமேன் ஹாஷிம்குலக் காஸிம்முஸ்த பாநபியே (12)

முள்ளாறுங் கல்லாறு மூழ்கிப் பாா்தவெள்ளத்
துள்ளாறு மான்காட்ட வுந்துகரை கண்டோரே
புள்ளாறு காலுழப்பப் பூஞ்சோலை பூவிருந்தி
கள்ளாறு பாயுமக்கா காஸிம்முஸ்த பாநபியே (13)

பால்சாய்க்கும் வெள்ளைவட்டப் பாரரசர் வீரமுரண்
வேல்சாய்க்கும் வெற்றிகொண்ட வேதாந்தத் துட்பொருளே
சேல்சாய்க்கு முட்புறக்காய் செவ்வாழைக் குலைவரம்பிற்
கால்சாய்க்கு மக்கநகர் காஸிம்முஸ்த பாநபியே (14)

பரணியாய்த் தன்னளிக்கண் பார்த்தெவ் வுயிர்க்கும்புக
லரணியாய்த் தன்னுயிர்போ லாளுங் கருணேச
யேணியாய்க் கடந்தறுஷி லேகனைக்கண் டெட்டுசொர்க்கங்
காணியாய்க் கொண்டவெங்கள் காஸிம்முஸ்த பாநபியே (15)

நத்தூரி யகுளத்தி னூரமின்றி நாட்டியவம்
புத்தூரி னின்றவெள்ளம் பொங்கிவரத் தானழைத்தீர்
முத்தூரி யகுடையின் மூவுலகுங் காக்குமெய்யிற்
கத்தூரி வாடைகமழ் காஸிம்முஸ்த பாநபியே (16)

வேலேறு முட்குடைவேல் வெய்யசிலை வேடனுக்காய்
மாலேறு நின்றுசலாம் வந்துசொல விண்டோரே
கோலேறி ருலழுதேன் குண்டூர்ந்து வந்துகொடிக்
காலேறு மக்கநகர் காஸிம் முஸ்த பாநபியே (17)

மட்டுரைம் பாலழக மாணிக்கப்பொற் கொப்பையொட்டித்
தொட்டூர் கருங்கயற்கட் டோகையர்க்கா ளாவேனோ
வெட்டூ ரடுங்களப்போர் வென்றதற்பின் மூன்றுபகல்
கட்டூ ரமர்ந்துவருங் காஸிம்முஸ்த பாநபியே (18)

சேந்தமட்டும் வாய்ந்தபதந் தெப்பந்தொட்டேன் பாவவெள்ள
நீந்தமட்டும் போந்துசற்றே நின்றுகரை யேற்றுமையா
சாந்தமட்டும் கஸ்தூரிச் சாலமணமேவு மெண்டி
காந்தமட்டும் வீசும்புய காஸிம்முஸ்த பாநபியே (19)

வெற்பூரு மற்புயமும் வெண்ணகையும் முத்திரையும்
பொற்பூர் முகாம்புயமும் பொன்னடியுங் காணேனோ
அற்பூரு மின்சொன்மறை யாரமிர்தச் செவ்வாயிற்
கற்பூர வாடைகமழ் காஸிம்முஸ்த பாநபியே (20)

போரூருஞ் செவ்வேற்கண் பொருதுமட வார்கிதம்பத்
தேரூருங் கோட்டாறுங் தேடிமெ லிவேனே
நீரூரும் பாரூரு நின்றாறுஞ் சீருடைய
காரூருஞ் செங்கையெங்கள் காஸிம்முஸ்த பாநபியே (21)

ஊசிமேனாட்களைந்தாங் குளதாயி ஷாமனையில்
தாஸிமே நும் மொளிவாற் றூன்கவர நின்றோரே
வீசிமேற் கொழுந்தோடி விண்பூத் தலர்ந்தபுகழ்
காஸிமே ஹாஷீம்குலக் காஸிம்முஸ்த பாநபியே (22)

விண்ணின்மணி யேபொருளே வெண்மணியே ரத்தினமே
எண்ணின்மணி யேகுருவே யெவ்வுயிர்க்குந் தாயகமே
மண்ணின்மணி யேதருவே வாய்ந்தவுல கேழும்புகழ்
கண்ணின்மணி யேநிதியே காஸிம்முஸ்த பாநபியே (23)

கோடுபடுஞ் செம்பவளக் கொம்பனார் கண்வலைபட்
டடுபடும் பாவியை யீடேற்றுவது மெந்நாளோ
பீடுபடுந் தேறற் பெறுக்காறு வட்டுஞ்செந்நெற்
காடுபடு மக்கநகர் காஸிம்முஸ்த பாநபியே (24)

பூவா ரணமுகத்தே புக்கியிறந் தாலுமுயிர்
தாவா ரணமுகத்திற் சஞ்சரிக்கக் கூடாதே
பாவா ரணமுகைக்கும் டைம்பொனகர் கற்பகப்பூங்
காவா ரணமுகைக்கும் காஸிம்முஸ்த பாநபியே (25)

மாகபடா மிட்டவிழி மாயவலைப் பட்டுழன்று
பூகபடா மிட்டதனப் பூவையர்க்கா ளாவேனே
வேகபடா மிட்டமுக வேழமன்னர் மாளவெட்டிக்
காகபடா துட்டவைவேற் காஸிம்முஸ்த பாநபியே (26)

பரம்போதி யன்றுமது பாதாம் புயம்பணிந்து
வீம்போதி வந்துசலாம் விண்டுசால நின்றோரே
பூம்போதி லஞ்சிறைப்பூம் புள்ளியுடைப் புள்ளினங்கள்
காம்போதி பாடுமக்கா காஸிம்முஸ்த பாநபியே (27)

சேல்பிடித்த பண்டூர்ந்து தெரித்திர நோயுந்தீர்ந்து
மால்பிடித்த சஞ்சலமு மற்று மொழியேனே
பால்பிடித்த சிந்தை பாராக்கோ பரமடையக்
கால்பிடித்தேன் கண்ணில்வைத்தேன் காஸிம்முஸ்த பாநபியே (28)

நீயிரங் நாளொளியாய் நித்திலமாய் மாமயிலாய்
மாயிருளா லத்தீற்றின் வந்தநபி நீரல்லவோ
பாயிராக மத்தோங்கும் பரமனுத் தென்றோழிய
ஆயிராக மத்துடையீர் ஆலநபி யுல்லாவே (29)

நீலவட்ட வானிந்தி நிலவுவட்ட மென்றுவரத்
தாலவட்ட மீதில்ரண்டு சந்த்ரவட்ட மாக்கிவிட்டீர்
காலவட்ட மோங்குமுச்சிக் கதிரோற்குத் தான்கதலி
ஆலவட்டம் வீசுமக்கத் தாலநபி யுல்லாவே (30)

துக்கரண பாதங்க டுண்டுகலி தீண்டாமற்
சக்கரவ ளத்தாண்ட சாபித்தெனை யாண்டுகொள்வீர்
செக்கரள கேசசெல்வ சித்திமுத்தி நல்கிமூவெட்
டக்கரந்தந் தானுமக்கத் தாலநபி யுல்லாவே (31)

போற்றுவரா ராத்மாவைப் பொறுப்பவராற் செய்தகுற்றந்
தேற்றுவராற் மனப்பீடை தெரித்திரநோய் பாவமற
மாற்றுவரார் வல்லோன்முன் மன்றாடிச் சொர்க்கபதி
ஆற்றுவரா ரும்மையல்லால் ஆலநபி யுல்லாவே (32)

பாதவனந் தாவனத்துப் பாரிசல்மான் பாரிசுக்காய்ச்
சீதவனந் தான்சிதறச் சீமுதம்பெய் வித்தோரே
மாதவனந் தந்தகஃ பாவைவலங் கொண்டுதிங்கள்
ஆதவனந் தோடுமக்கத் தாலநபி யுல்லாவே (33)

கூனிறால் பாய்ந்துவெளிக் குண்டமுக டுடுருவித்
தேனிறால் கீறிவிழி தேனூறு வட்டொழுகிக்
கானிறா றுறவளருங் கன்னியின் வாழைநிழல்
ஆனிறா றுஞ்சுமக்கத் தாலநபி யுல்லாவே (34)

கூம்பூடு பாய்விரித்து கூன்பிறைய வாங்கவந்தீர்
தாம்பூடு பாய்துலவத் தான்பொருப்பிற் றந்தோரே
வீம்பூடு போனவுயிர் மீட்டமிர்த சஞ்சீவி
யாம்பூடு போன்றமக்கத் தாலநபி யுல்லாவே (35)

மூசா பைத்துல்மஃ மூறிற்சொற்ற சொற்சேரக்
கோசால மாய்நிறுத்திக் கொண்டிறைமுன் சென்றோரே
வாசாம கோசரமாய் வந்த குருஆன்வழிநீன்
ஆசாரமாய் நடத்தும் ஆலநபி யுல்லாவே (36)

பாசனல னேதும் படைத்திலே னுடையபவ
மோசமா கும்படிக்கே மோட்சந்தா வேண்டுமையா
மாசனமா ரும்புகழ வல்லோ னறுஷினிற்சிங்
காசனமே லேறுமக்கத் தாலநபி யுல்லாவே (37)

தாறலேவில் விசியபூந் தண்டலேயி னூடுடும்பு
வேறலேவி லாமலுமை வேண்டிவச னித்ததனுற்
பேறலேவி லாதவொரு பேரின்பக் கலிமாவை
ஆறலேவில் வேடற்கரு ளாலநபி யுல்லாவே (38)

காசீம் புலவரவர்கள் இன்னிசை முற்றிற்று.

---

சென்னே, நாவலெப்பை முஹம்மது கௌஸ் அவர்களின் புதல்வரும்
திருவல்லிக்கேணி அஹ்மதியா சங்கத்தின் அன்பருமாகிய
நாவலெப்பை முஹம்மது யூஸுப் அவர்கள்
பாடிய

# கலியாண வாழ்த்து பதங்கள்

(கஞ்சமா மலர் பாதமே என்ற மெட்டு)

பல்லவி

சோபன சுப சோபனமே
சசி ரவி போல் வாழ்ந்திடவே
விபுதர் வாழ்த்தும் மாமணாளர்
சசி ரவி போல் வாழ்ந்திடவே

சரணம்

சுவன லோகம் தன்னில் திவ்ய
சவுந்த்ர ரம்பையர் பாடிட
தேவ ஆனந்தம் பாவா ஆதம்
ஹவ்வா அன்பால் வாழ்கவே (சோபனசுப)

ஏந்தல் இபுரு ஹீமகிழ் ஸாரு
இறைநபியூ ஸுப் ஸுலேகா
சாந்தகுண திரு ஐயூபுறஹ்மா
விந்தையன்பால் வாழ்கவே (சோபனசுப)

மகிமை நபியின் மூஸா ஸபூரு
மன்னர் சுலைமான் பல்கீஸா
மகிதல மேல் மண துணையுடன்
வாழ்க்கை யதுபோல் வாழ்கவே (சோபனசுப)

பாவை ஆமினா மகன் முஹம்மது
தெய்வ ரம்பையர் தோத்திரம்
குவைலின் மகளார் குணரஞ்சித சிர்
கதீஜா அன்பதால் வாழ்கவே (சோபனசுப)

---

"என்ன செய்வேன் நபியே நபினாரே" என்னும் மெட்டு.

பல்லவி

மண் மேல் மணகோல மங்கள வாழ்த்து
திங்கள் நபி சொன்ன தீனின்ப வாழ்த்து

சரணம்

பொன்னகர் தன்னின் பிதா ஆதம் ஹவ்வா
சொன்னாரெனக்கு மஹரென்ற மேவ
அண்ணல் முஹம்மது ஸலவாத்தைத் தாவ
மன்னன் மொழிந்தான் மறைமதி ஏவ (மண் மேல்)

மங்கா மறைதுவக்க மஹத்துவ ரூபா
துங்க வசிகர தூய்மையின் தீபா
சங்கை மனுவோர்க்கு தோத்திர கஃபா
இங்கிர்தமாய் செய்தார் இபுறுஹீம் ஸாரு (மண் மேல்)

இணை துணை செய்கையின் இணையற்ற அன்பர்
துணை மக்கள் துரோகத்தை சாந்தங் கொள் நன்பர்
இணையில்லா ஜோதி வரப்பிரகாசர்
மனையோர்கள் மகிழ் யூஸுப் ஸுலைகா (மண் மேல்)

றப்பனை மறவாதே என்னாளும் கியாதி
தப்பித மில்லாத தத்துவ மெய்தியாகி
செப்பினான் மல்லூன் தவரிட நீதி
ஒப்பாத றப்பின் அய்யூபு றஹ்மா (மண் மேல்)

பிரஜூனைச் சோதிக்க பிறந்தார் மெய் நூரா
பிரபல்ய கீர்த்தியின் மூஸா ஸபூரா
தாணிமேல் தனி செங்கோல் தான் ஆட்சி சிரா
பராபரன் அன்புற்ற ஸுலைமான் பல்கீஸா (மண் மேல்)

தெய்வம் எல்லோர்க்கும் ஒன்றென்ற வள்ளல்
போதிக்கும் தூய்மையாய் தூதரின் ஜெம்மல்
பொய்மத பேதங்கள் போக்கிடும் காமில்
மெய்யோன் அன்புள்ள முஹம்மது கதீஜா (மண் மேல்)

---

"ஆசைக் கொள்ளும் மீசையுள்ள" என்ற மெட்டு.

பல்லவி

மார்க்க மத மாலை மண—வாசதர்பாருங்க—மங்களதர்பாருங்க
அமைப்பெது சொல்லுவாய்—அமைப்பெது சொல்லுவாய் நீ
கலைதானுங்க—சதுர் மறைதானுங்க—நபி மொழிதானுங்க

சரணம்

தாரணியில் தந்தை—ஆதம்—தானுனை நாடியே
ஹவ்வா மணியை தாவியே—அன்பானந்தம் மேவியே
நேர்மை இபுருஹீம் ஸாரு—நயகுண ஹாஜரு
மெய்யோன் புறுகானின் துதி—வாழ்த்தி புகழ்ந்தோதுவோம்
மங்கள கீதம் பாடுவோம் (அமைப்பெது சொல்)

திங்கள் திருமாவதன—திவ்ய மய ஜோதியே
திக்கெங்கும் நிலாக்கியாதியே—திண்ணமாய் திகழ்ந்தோதியே
சங்கை யூஸுப் நபி—மகிழ்ந்திடும் ஸுலைகா
மெய்யோன் புறுகானின் துதி—வாழ்த்தி புகழ்ந்தோதுவோம்
மங்கள கீதம் பாடுவோம் (அமைப்பெது சொல்)

அகிலாண்ட லோகம் துதி—ஆதியின் மாட்சியே
அற்புத இன்பக்காட்சியே—அய்யூபு றஹ்மா கீர்த்தியே
மகிமை சிறந்திலங்கும்—மூஸா நபி ஸபூரு
மெய்யோன் புற்கானின் துதி—வாழ்த்தி புகழ்ந்தோதுவோம்
மங்கள கீதம் பாடுவோம் (அமைப்பெது சொல்)

ஜெக மெங்கும் ஆட்சி செய்யும்—செங்கோலின் ராஜாராம்
ஜீவ ஜந்துக்குல்லாசராம்—செல்வ தயாள நேசராம்
நிகழ்ச்சி நபி ஸுலைமான்—நட்பின் சீர் பல்கீஸா
மெய்யோன் புற்கானின் துதி—வாழ்த்தி புகழ்ந்தோதுவோம்
மங்கள கீதம் பாடுவோம் (அமைப்பெது சொல்)

விண்ணின் மதியழைத்த—வேதாந்த நாயகர்
சன்மார்க்கத்திகழ் போதகர்—சமதோன்னபி நாயகர்
தன்நிழல் சாய்கையில்லா—தாஹா நபி கதீஜா
மெய்யோன் புற்கானின் துதி—வாழ்த்தி புகழ்ந்தோதுவோம்
மங்கள கீதம் பாடுவோம் (அமைப்பெது சொல்)

மங்கள மஹா சபையில்—இலங்கும் மணாளராம்
*............................................
அங்கம் கமழ் கஸ்தூரி—முஹம்மது அருளால்
மெய்யோன் புற்கானின் துதி—வாழ்த்தி புகழ்ந்தோதுவோம்
மங்கள கீதம் பாடுவோம் (அமைப்பெது சொல்)

(* இங்கு மாப்பிள்ளை, பெண் பெயர்களை ஒழுங்குபடி சேர்த்துக் கொள்ளவும்)

---

நொண்டிச் சிந்து

பல்லவி

மங்கள மங்களமே—இங்கே
மணம் புரி மணாளர் மணாளியர்க்கும்—மங்களமே

சரணம்

புங்கவன் அருள் ஆதம் ஹவ்வா—புகழ்
இபுறாஹீம் ஸாரா துணை ஹாஜரா
துங்க வடிவழகாம்—ஜோதி
எங்கும் பிரகாசம் யூஸுப் ஸுலைகா (மங்கள)

பொருமையின் பொக்கிஷமாம்—திரு
அருமை துலங்கும் ஐயூபு றஹ்மா
தூருஷினா மலை தன்னிலே—ஆதி
அருளை தெரிசிக்கும் மூஸா ஸபூரா (மங்கள)

ஜெகமேல் மனு ஜீவ—ஜந்துக்கள்
தகமயின் தாளினை வணங்கிடவே
ஏகன் நபி ஸுலைமான்—பல்கீஸ்
உகப்பாய் வாழ்க்கையில் இணைவது போல் (மங்கள)

முத்துமணி வண்ணமே—முதலோன்
தத்துவத்தின் சிகாமணியே
கத்தன் அர்ஷதிலே—மதிபோல்
உத்தமர் முஹம்மது நபி கதீஜா (மங்கள)

துல்துல் அலி புலியார்—பாத்திமா
செல்வ ஹஸன் ஹுஸைன் அன்சாரி
நல்மொழி தவறாத—யார்கள்
உடன் அஸ்ஹாபி அஹ்லு பைத்தோர் (மங்கள)

செல்வ தயாளராம்—மணவாளர்
*.............................................
ஸல்லிம் ஸலவாத்தின்—அருளால்
சபைதனில் மங்கள புகழ் பாடிடுவோம் (மங்கள)

(* இங்கு மாப்பிள்ளை, பெண் பெயர்களை ஒழுங்குபடி சேர்த்துக் கொள்ளவும்)

---

("தர்க்க அப்ஸானா" என்ற மெட்டு)

பல்லவி

சுப மங்கள மங்களமே—மணாளர் மணாளியர்க்கும்
மஹ்சரநபி திரு அருளால்—மணாளர் மணாளியர்க்கும் (சுப மங்கள)

சரணம்

ஆதியின் மய ஜோதி—ஆதம் மகிழ்ந்திடும் ஹவ்வா
நீதியை மறவாத—நபி இபுறாஹீம் ஸாறா (சுப மங்கள)

ஆதவன் ஜொலி பிந்தும்—அகிலத்தோர் அதிசயிக்கும்
மாதவ மகத்துவமாம்—மதி யூஸுப் ஸுலைகாக்கும் (சுப மங்கள)

பொறுமையின் பொக்கிஷராம்—பிரபல்ய அய்யூபுறஹ்மா
அருமை சிறந்திலங்கும்—அண்ணல் மூஸா ஸபூரு (சுப மங்கள)

அகில மெல்லாம் ஆட்சி—அன்போங்கும் செங்கோல் தவமே
மகிமையாய் ஆண்டவராம்—மன்னர் ஸுலைமான் பல்கீஸ்
(சுப மங்கள)

அஞ்ஞான மென்னும் இருளை—அகற்றிடும் நம் ஆண்டகையே
மெஞ்ஞானம் சிறந்திலங்கும்—முஹம்மது நபி கதீஜா
(சுப மங்கள)

---

ஒலிமா வென்னும் விருந்தின் கும்மி இசை

1. ஆலம் இன்ஸான் என்ற மாய்கையில்—திரு
கல்யாண காட்சியின் ஆனந்தம்
கோலமண வாசங்கள் வீசிடும்
மங்கள மா புகழ் ஓதுங்கடி.

2. இன ஜன பந்துக்கள் வாதுகள் போக்கிட
மன மதில் சந்தோஷம் கொண்டாட
குணமது ஒன்றாக சேர்ந்திட கூடியே
மணமக்கள் புகழ் பாடுங்கடி.

3. பட்டு சரிகை பளபளப்பெனுமே
கட்டிடும் ஆடையுடை மின்ன
பட்டப்பகல்போல் தீப அலங்காரம்
பகட்டில் மாப்பிள்ளையை பாருங்கடி.

4. தங்க நகை ஜோதி தகத்தக வென
தொங்கிடும் மாட்டல் கம்மல் ஜொலிக்க
இங்கிதமா இலங்கிடும் பெண்மணி
அற்புத மாழ்ச்சிமை கேளுங்கடி.

5. உன்னதமான ஊர்திலே
உகப்பாக வந்திடும் ஊர்வலமே
நன்னிதமாக இமாமாக வந்துமே
இணைப்பின் வாழ்த்தை பாருங்கடி.

6. வலிமா வென்னும் விருந்ததிலே
மாப்பிள்ளை பெண்ணின் இன ஜனங்கள்
சலியாமல் நின்று உபசாரம் செய்திடும்
சங்கையின் அன்பதைப் பாருங்கடி.

7. நற்மலர் ரோஜா மல்லிகை மாமணம்
நேர்த்தியாய் கமழ்ந்திடும் உல்லாசம்
துர்மணம் போக்கிடும் அத்தர் அம்பர் வாசம்
தூய்மையாய் வீசிடும் பாருங்கடி.

கலியாண வாழ்த்து பதங்கள்

முற்றிற்று.

மஜ்மூஅ முனாஜாத்

முற்றிற்று.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

காமில் ஒலி ஹஸரத்

# அபூபக்கர் ஷிப்லி (றலி) ஜீவிய சரித்திரம்

தௌஹீத் என்னும் ஏக தெய்வத்துவத்தை அறிய, சுகபோகங்களை விட்டு பக்கீர் கோலம் கொண்டு ஹக்கைக்கண்ட மஹான் ஷிப்லி (றலி) அவர்கள் ஞான மார்க்கமான தஸவ்வுபுடைய தீர்க்கத்தைக் கண்டறிந்த வரலாறும், அவர்கள் புரிந்த போதனைகளும், அவர்களின் ஜீவியமும் அடங்கியது.

விலை ரூ. 1–12–0

# ஸுல்தான் சிக்கந்தர் (அலை) கிஸ்ஸா

ஸுல்தான் சிக்கந்தர் ஜுல்கர்னைன் (அலை) அவர்கள் ஒரு நபியாக இருந்து உலகத்துக்கும், உலக மக்களுக்கும் பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறார்கள். ஸுல்தான் சிக்கந்தர் ஜுல்கர்னைன் உடைய அரசாட்சி உலகத்தில் சிறந்த அரசாக்ஷியாய் இருந்தது. "ஜுல்கர்னைன்" என்றால் இரண்டு கொம்புகளை யுடையவர் என்று அர்த்தம். இதன் விபரமெல்லாம் இந்த நூலில் விரிவாய் சொல்லப் பட்டிருக்கிறது.

இத்துடன் நம்ரூது மன்னருடைய கிஸ்ஸாவும், நபி லூத் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாவும் சேர்த்து எழுதப் பட்டிருக்கிறது. எல்லோரும் படித்து அறிய வேண்டிய பிரயோஜனமான புத்தகம் இது.

சுத்தத் தமிழ் விலை அணா. 8

---

**கிடைக்குமிடம்:—**

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். 5

**பிராஞ்ச் ஆபீஸ்:—**

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 194, கைஸர் தெருவு, கொழும்பு 11. (ஸிலோன்.)

**பிரிண்டிங் ஆபீஸ்:—**

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்
நெ. 18. கெஜட்டி பேகம் தெரு, ராயபேட்டை, மதராஸ் 14.

---

PRINTED AT SHAHUL HAMEEDIA PRESS, MADRAS.

# Memorandum of Books etc., Printed during the month of April 1954.

| The title of the book and the contents of the title page. | The language in which the book is written. | The name of the (a) Author (b) The translator or (c) The Editor of the book or any part thereof | The subject. | (a) The place of printing (b) The place of publication. | (a) The name or firm of the printer. (b) The name or firm of the publisher. | The date of delivery from the press and of the publication. | The number of leaves sheets or pages. | The size. | The first, second or other number of the Edition. | The number of copies of which the Edition consists. | Whether the book is Printed or Lithographed. | The price at which the book is sold to the public. | The name and residence of the proprietor of the Copy-Right or of any portion of such Copy-Right. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| Majmoo Aa Manaqib [illegible] | Tamil. | (a) Hajee M.A. Shahul Hameed & Sons. | Religious | Shahul Hameedia Press. | Hajee M.A. Shahul Hameed & Sons. No. 20, High Road, Triplicane, Madras. | 22-4-1954 | 52 | Demy 1/8 | Second | 2000 | Printed | 0-8-0 | Hajee M.A. Shahul Hameed & Sons. No. 20, High Road, Triplicane, Madras. |

Office of the Registrar of Books, 1 MAY 1954, Madras

I declare that the above entries are correct and true to my knowledge.

SHAHUL HAMEEDIA PRESS,
MADRAS.

Dated 30/4/1954.

For Hajee M. A. Shahul Hameed & Sons.
M. S. [illegible]

*Publisher.* *Partner.* *Proprietor.*

78
6-57

# அன்வாருல் குர்ஆன்

## என்னும் திருமறைப் பிரகாசம்

1-வது ஒளி

குர்ஆன் ஷரீபின் 30-வது பாகமாகிய

## அம்மயத் ஜுஸ்வுவின் தர்ஜுமா

(முதற் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் அம்மயத் ஜுஸ்வுவில் உள்ள எல்லா ஸூருக்களும் தர்ஜுமா செய்யப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு ஆயத்தையும் முதலில் அரபியில் ஒரு நூதன எழுத்தைக் கொண்டு அச்சிடப்பட்டு, அதை யடுத்து அதற்குத் தமிழில் உச்சரிப்பு காயிதா உடன் போடப்பட்டு, அதனை யடுத்து அந்த ஆயத்தின் பொருளை சுத்தத் தமிழில் போடப்பட்டு இருக்கின்றன. இந்த புஸ்தகம் அம்மயத் ஜுஸ்வுவிலுள்ள ஒவ்வொரு ஆயத்திற்கும் பொருளை அறிந்துகொள்ள உதவுவதுடன் அரபியே தெரியாதவர்கள் அம்மயத் ஜுஸ்வுவிலுள்ள எந்த ஸூருவையும் ஓத தெரிந்து கொள்ள உதவும். விலை அணா. 12

அன்வாருல் குர்ஆன் 2-வது ஒளி

## ஸூறத்து யாஸீன் தர்ஜுமா

(முதற் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஸூறத்து யாஸீனில் உள்ள ஒவ்வொரு ஆயத்தையும் 1-வது ஒளியைப் போலவே தமிழ் உச்சரிப்புடன் தர்ஜுமா செய்யப்பட்டிருக்கின்றது. விலை அணா. 8

## ஸூறத்து யாஸீனும் துஆவும்

யாஸீன் ஸூராவுடைய அரபு ஆயத்துகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டு திருத்தமாய் ஓதும்படியான அமைப்புகளுடையதாகும் இந்த கிதாபு. இதில் பெரிய துஆவும், பாத்திஹா ஓத வேண்டிய தர்த்தீபுகளும், ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓத வேண்டிய துஆக்களும் தல்கீனும் அதன் தர்ஜுமாவும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை அணா. 7

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.